விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 07 வியாழக்கிழமை (21.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 185

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## புலிகளின் நடவடிக்கையை கண்காணிக்கும் லக்ஸம்பேர்க்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற குழுக்களின் நடவடிக்கைகளை லக்ஸம்பேர்க் அதிகார பீடங்கள் ஏற்கெனவே நன்கு அறிந்திருப்பதாகவும் இவ்வாறான நடவடிக்கை பற்றி மிகுந்த விழிப்புடன் இருக்கப் போவதாகவும் லக்ஸம்பேர்க் பிரதி பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான ஜீன் அஸல்போண் கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பெல்ஜியம், லக்ஸம்பேர்க் ஆகியவற்றுக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தனது பதவிக்காலம் முடிந்து இலங்கை திரும்பவுள்ள நிலையில் விடைபெறுவதற்காக சென்றபோதே அஸல்போண் இக்கருத்தை வெளியிட்டார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் எச்சசொச்ச உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் (19ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் சம்பிக்கவின் பேச்சை கண்டித்து கருணாநிதி கடிதம்!



(சென்னை)

ஒரு முள்ளிவாய்க்கால் சம்பவமே போதும், நூறு முள்ளிவாய்க்கால் படுகொலை சம்பவங்கள் நடைபெற யாரும் முயற்சிக்க வேண்டாம் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்திருப்பதற்கு தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது (02ஆம் பக்கம் பார்க்க)



# அனுமதி மறுக்கப்பட்டால் இலங்கை மீது நடவடிக்கை

## நவநீதம்பிள்ளை திட்டம்



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்ய ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழுவுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் மறுப்புத் தெரிவித்தால், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும் என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## அக்கறை காட்டாத நாடு இலங்கை!

(கொழும்பு)

சட்ட விரோத ஆட்கடத்தல்களை தடுப்பதில் அக்கறை காட்டாத நாடுகளின் வரிசையிலேயே இலங்கையின் பெயர் அமெரிக்காவினால் பட்டியல் படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் சட்ட விரோத ஆட்கடத்தல்கள் தொடர்பான ஆண்டறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த ஆண்டில் சட்ட விரோத ஆட்கடத்தல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய எவரும் இலங்கையில் தண்டிக்கப்படவில்லை எனவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் படையினர் அமைதிப் பயணம்

(கொழும்பு)

அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கைப் படையினர் லெபனானுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

150 இராணுவப் படை வீரர்கள் இவ்வாறு லெபனானுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

அமைதி காக்கும் பணிகளுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். பத்து அதிகாரிகளும், (19ஆம் பக்கம் பார்க்க)

## அரசை வீட்டுக்கு அனுப்புவதே நாட்டு மக்களிடமுள்ள பொறுப்பு

### ஜே.வி.பி. வலியுறுத்தல்

(கொழும்பு)

நாட்டு மக்களுக்குரிய தற்போதைய பொறுப்பு மனித படுகொலையைச் செய்து வரும் மகிந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதே என ஜே.வி.பி. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் ஜே.வி.பி. கட்சி அங்கத் தவர்கள் இருவரின் கொலையைக் கண்டித்து கொழும்பு கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற பாரிய ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டையில் எமது கட்சி அங்கத்தவர்கள் இருவரின் கொலையுடன் அரசியல் பின்னணி உள்ளது. இதனால் இந்த இரு மரணங்களுக்கு (19ஆம் பக்கம் பார்க்க)

## மிக உயரமான மனிதராக புலிகளின் முன்னாள் போராளி

(கொழும்பு)

இலங்கையிலே மிக உயரமான மனிதராக கருதப்படுபவர் தற்போது பொலநறுவை மாவட்டத்திலுள்ள கண்டக்காடு புனர்வாழ்வு முகாமில், புனர்வாழ்வு பெற்றுவரும் ஒரு முன்னாள் போராளியாவார்.

குணசிங்கம் கஜேந்திரன் என்ற இந்த முன்னாள் போராளியின் உயரம் 7 அடி 3 அங்குலமாகும். அவர் 2009 மே 17ம் நாள் இராணுவத் (02ஆம் பக்கம் பார்க்க)



After O/L or A/L
LEARN ACCA
புதிய வகுப்புக்கள்
JUNE 21 முதல்
ஆரம்பம்
K-AIMS
We Make You Progress Everyday.
Diploma — Diploma in Accounting and Business
+ UK Degree — BSc (Hons) Applied Accounting (Oxford Brookes University)
+ ACCA — Association of Chartered Certified Accountants- U.K
In 2 ½ Years
No 3-1/2 Sirambiyadi Lane (Off Stanly Road) Jaffna
0772 555 814

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அசர வைக்கும் ஒற்றுமையை தமிழ்க் கட்சிகள் தொடரவேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்தல்



(கொழும்பு)

பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் மத்தியிலே இன்று ஏற்பட்டுள்ள ஒற்றுமை தொடர வேண்டும். இதுவே இன்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்களினது எதிர்பார்ப்பு.

அநீதிக்கு எதிராக சாத்வீக ரீதியாக நாம் அணி திரண்டிருப்பது இன்று ஆதிக்கவாதிகளையும் அவர்களுக்கு துணை போகின்றவர்களையும் அசர வைத்துள்ளது. சர்வதேச சமூகத்தையும் தென்னிலங்கையையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இந்த ஒற்றுமை தொடர வேண்டும்.

எமது இன்றைய இந்த ஐக்கியத்தை குழப்பும் எந்தவொரு நடவடிக்கையையும் அதை எவர் செய்தாலும் தமிழ் மக்கள் அவற்றை ஒருபோதும் ஆதரிக்கக் கூடாது. இதுவே எனது கோரிக்கை என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பித்து வைத்துள்ள மண்ணுரிமை இயக்கம் இன்று வடக்கில் சூடுபிடித்துள்ளது. இந்த இயக்கத்திற்கு ஆதரவு வழங்கியதுடன் அதைத் தொடர்ந்து முன்கொண்டு செல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

உரிமைக்கு குரல் கொடுப்போம். உறவுக்கு கை கொடுப்போம் என்ற எமது கட்சியின் உறுதியான கொள்கையின் அடிப்படையில் இந்த இரண்டு கட்சிகளுக்கும் ஜனநாயக மக்கள் முன்னணி முழுமையான ஆதரவு வழங்குகின்றது.

நமது இந்த ஒற்றுமை மக்களை அணி திரட்டும் ஜனநாயக போராட்டக் களத்தில் ஏற்பட்டுள்ளது என்பதுதான் முக்கியமானதாகும்.

மண்ணுரிமை பறிப்பு என்பது வடக்கில், கிழக்கில் தமிழ் மக்களுக்கு மாத்திரம் உரிய பிரச்சினை அல்ல. அது முஸ்லிம் மக்களும் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை ஆகும். எனவே முஸ்லிம் மக்களை தலைமை தாங்கும் கட்சிகளும் தமிழ்க் கட்சிகளின் ஜனநாயகப் போராட்டங்களுடன் தம்மை இணைத்துக் கொள்ள தயாராக வேண்டும். பொது நோக்கம் கொண்ட இத்தகைய ஒற்றுமை மலையகத்திலும் மேலோங்க வேண்டும். மலையக கட்சிகளும் தமது குறுகிய நோக்கங்களை தூரத்தள்ளிவைத்துவிட்டு பொது நோக்கங்களுக்காக ஒன்றுதிரள தயாராக வேண்டும்.

தமிழ், முஸ்லிம் மக்களின் மண்ணுரிமைக் கோஷங்களும் ஜனநாயக போராட்டங்களும் சாதாரண சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல என்ற விழிப்புணர்வை நாம் தென்னிலங்கையில் ஏற்படுத்துகின்றோம். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை உறுதி செய் வதே உண்மையான தேசிய ஒற்றுமைக்கு அடித்தளம் என்ற செய்தியை நாம் தென்னிலங்கைக்குச் சொல்கிறோம்.

இந்தப் பணியில் ஜனநாயக மக்கள் முன்னணி ஏற்கெனவே ஈடுபட்டுள்ளது. தமிழ்க் கட்சிகள் தமது குறுகிய முரண்பாடுகளை தூரத் தள்ளி வைத்துவிட்டு ஒன்றுபடுவதன் மூலமாக இந்தப் பணியை மேன்மேலும் உறுதியாக செய்யமுடியும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய திருப்பணியைத் தொடர இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இந்து சமயப் பேரவையின் அழைப்பின் பேரில் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அதன் தலைமைச் செயலகத்தில் மருதடி விநாயகர் தர்மகர்த்தா சபையினருக்கும், வலி. தென்மேற்குப் பிரதேச சபையினரால் நியமிக்கப்பட்ட குழு அங்கத்தவர்களுக்கும் இடையே நேரடிக் கருத்துப் பரிமாறலும் கலந்துரையாடலும் நடைபெற்றது.

இதன்போது எவ்வித தடங்கலும் இன்றி ஆலய திருப்பணிகள் தொடரப்பட்டு வெகு விரைவில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு இருபகுதியினரும் மனப்பூர்வமாக விநாயகப் பெருமானை முன்னிறுத்தி இணங்கிக் கொண்டுள்ளனர்.

தொடர்ந்து இருசாராரும் ஒத்துழைத்து இப்பணியைத் தொடர்வதற்கு மனப்பூர்வமாக இணங்கியுள்ளனர். (ஏ)

## மிக உயரமான மனி...

தினரிடம் சரணடைந்து பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த பெப்ரவரி 22-ம் நாள் கண்டக்காடு புனர்வாழ்வு முகாமுக்கு இவர் மாற்றப்பட்டார். 33 வயதான கஜேந்திரன், சாவகச்சேரியை சேர்ந்தவர். இவருக்கு தற்போது 3 வயதில் ஒரு குழந்தையும் உள்ளது.

இலங்கையில் மிக உயரமான மனிதராகக் கருதப்படும் அவர், தனது உயரத்தினால் பல சிரமங்களைச் சந்திக்க வேண்டியுள்ளதாகக் கூறியுள்ளார்.

ஏனையோரைப்போல பேருந்துகளில் பயணிக்க முடியவில்லை. சாதாரணமாக வீடுகளில் உள்ள கதவுகள் வழியாக கடந்து செல்ல முடியவில்லை. குனிந்து கொண்டே செல்லவேண்டியுள்ளது.

உடல்நல ரீதியாகவும் இந்த உயரத்தினால் சிரமப்பட வேண்டியுள்ளது. அதிகநேரம் நிற்கவோ, நடக்கவோ, அமர்ந்திருக்கவோ முடியவில்லை. வெளியே செல்லும்போது மற்றவர்கள் நிமிர்ந்து பார்ப்பது சங்கடத்தை ஏற்படுத்துகிறது என்று அவர் கூறுகிறார்.

ஆனால், இந்த உயரம் தனக்கு சில வேளைகளில் உதவியாக அமைவதாகவும் கஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார். சாதாரணமாக வீடுகளில் மின்குமிழ்களை மாற்றுவதற்குக் கூட மற்றவர்கள் உயரமான ஒரு பொருளைத் தேட வேண்டியுள்ளது.

ஆனால் தனக்கு அவ்வாறு உயரமான பொருளை வைக்காமலேயே மின்குமிழ்களை மாற்ற முடிபதாக அவர் கூறுகிறார்.

ஒரு ஆண்டுக்கு கண்டக்காடு முகாமில் புனர்வாழ்வு மற்றும் தொழிற் பயிற்சியைப் பெற்ற பின்னர் இவர் விடுவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

## அமைச்சர் சம்பிக்கவின்...

குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கலைஞர் கருணாநிதி கடிதம் எழுதியுள்ளார்.

அக் கடிதத்தில், நூறு முள்ளிவாய்க்கால் படுகொலைச் சம்பவங்கள் நடைபெற வைப்பதற்கு யாரும் முயற்சிக்க வேண்டாம் என்று இலங்கை அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளது எங்களது கவனத்துக்குவந்துள்ளது. அவரின் பேச்சு கடுமையாக கண்டிக்கத்தக்கது.

எனவே இவ்விவகாரத்தை இலங்கை அரசிடம் கொண்டு சென்று இது போன்று பேசுவதைக் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் துயரத்திற்குப் பிறகு வட இலங்கையில் தமிழர் நிலங்கள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தங்கள் பூர்வீக வீடுகள், நிலங்களை இழந்த தமிழ் மக்கள், இப்போது அறவழிப் போரில் மீண்டும் குதித்துள்ளனர்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், கடந்த மாதம் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 14-வது தேசிய மாநாட்டில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரிய நிலம் என்பதை உறுதிப்படுத்தியாக வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

அவரது பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சம்பந்தனின் பேச்சு மீண்டும் சிங்களவர்களை சண்டைக்கு இழுப்பதாக உள்ளது. அதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். இவ்வாறு பேசுவது தொடர்ந்தால் இன்னும் நூறு முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நீங்கள் சந்திக்க நேரிடும், என்று சம்பிக்க ரணவக்க பேசியுள்ளார்.

அதற்கேற்ப யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் காலை நடந்த நில மீட்புப் போராட்டத்தில் பங்கேற்ற நூற்றுக் கணக்கான தமிழர்கள் மீது இராணுவம் தாக்குதலும் நடத்தியுள்ளது.

அமைச்சரின் பேச்சு, இலங்கையில் எத்தகைய சூழலில் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதை உலகுக்கு பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. மேலும் சிங்கள இனவாதத்தின் உச்சமாகவும் கருதப்படுகிறது. அவரது இந்தப் பேச்சுக்கு தமிழ்த் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி தன் கண்டனத்தைத் தெரிவித்ததோடு, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதமும் எழுதியுள்ளார். (எ-11)

## விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் தஞ்சம்

விக்கிலீக்ஸ் இணையதளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசேன்ஜ் லண்டனிலுள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சம் கோரியுள்ளார்.

அவுஸ்ரேலிய பிரஜையான ஜூலியன் அசேன்ஜை பாலியல் வல்லுறவு வழக்கொன்று தொடர்பாக கைது செய்யுமாறு சுவீடன் நீதிமன்றமொன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் பிரிட்டனிலிருந்து தன்னை நாடு கடத்துவதற்கு எதிராக அவர் பிரித்தானிய நீதிமன்றங்களில் தாக்கல் செய்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அவர் தென் அமெரிக்க நாடான ஈக்குவடோரில் தஞ்சம் கோரியுள்ளார்.

ஜூலியன் அசேன்ஜ் தற்போது பிரித்தானிய பொலிஸாரின் அதிகார வீச்சுக்கு அப்பாற்பட்ட ராஜதந்திர வலயத்தில் இருப்பதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-1)

யாழ் நகரில் .....
உங்கள் அனைத்து வைத்திய சேவைகளுக்கும் .....
சாந்தம் வைத்தியசாலை
வெளிநோயாளர் பிரிவு (OPD)
உள்நோயாளர் பிரிவு (IPD)
ஆய்வுகூட வசதி (Laboratory)
சகல இரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனைகளும் உடனடியாகச் செய்து கொள்ளலாம்!
ECG, Scanning வசதி
Home Visit நடமாட முடியாத நோயாளர்களுக்கு வீட்டிற்கு வந்து சிகிச்சை அளிக்கப்படும்.
விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனை
நீரிழிவு நோயாளர்களுக்கான இலவச ஆலோசனை!
வெகுவிரைவில் சத்திர சிகிச்சை, மகப்பேற்று விடுதி ஆரம்பம்!
இல. 126, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
021 567 6577

## பவுசர் தடம்புரண்டதில் இருவர் படுகாயம்

(ஆனையிறவு)

தண்ணீர்பவுசர் தடம் புரண்டதில் அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியில் உள்ள முரசுமோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வீதிப் புனரமைப்புக்காக நீர் வழங்கிவிட்டு முரசுமோட்டையில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த தண்ணீர் பவுசர் உழவு இயந்திரத்தை விலத்திச் செல்ல முற்பட்ட வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ரஞ்சித் பெரேரா(வயது 50), ஜெயராஜா (வயது 32) ஆகிய இருவருமே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-3;264)

## புகைப்பிடித்த மூவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் பொதுஇடத்தில் புகைத்தலை மேற்கொண்ட மூவருக்கு யாழ்.நீதிமன்றம் 11 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

பொது இடத்தில் புகைத்தலை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் யாழ். பொலிஸாரினால் மட்டக்களப்பினைச் சேர்ந்த ஒருவரும் ஊர்காவற்றுறையினைச் சேர்ந்த ஒருவரும் கோப்பாயைச் சேர்ந்த ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ் வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதிவான் மா.கணேசராஜா, குறித்த மூவரில் இருவருக்கு தலா 4 ஆயிரம் ரூபாயும் ஒருவருக்கு மூவாயிரம் ரூபாயும் அபராதமாக விதித்துத் தீர்ப்பளித்தார். (எ-4)

## விதிகளை மீறிய நால்வருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து விதிகளை மீறி வாகனம் செலுத்திய நால்வருக்கு யாழ்.நீதிமன்றம் 29 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

இதில் கல்வியங்காட்டைச் சேர்ந்த சாரதி மது போதையிலும், காப்புறுதிப் பத்திரம், வாகன சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனத்தைச் செலுத்தியவருக்கு 13 ஆயிரத்து 500 ரூபாயும், பண்ணைச் சந்தியில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றியும் மது போதையிலும் வாகனம் செலுத்தியவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாயும், ஆரியகுளம் சந்தியில் மின்குமிழ் இல்லாமலும், ஏனைய வாகனங்களுக்கு இடையூறாகவும் வாகனம் செலுத்தியவருக்கு 3 ஆயிரம் ரூபாயும் மற்றும் உரும்பிராயில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 5 ஆயிரம் ரூபாயும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நால்வரில் இருவர் கோப்பாய் பொலிஸாரினாலும், இருவர் யாழ்.பொலிஸாரினாலும் கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே மேற்படி அபராதத் தொகை யாழ்.நீதிவான் மா.கணேசராஜாவினால் விதிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## ஆங்கில தின பேச்சுப் போட்டி

யாழ்.வலய மட்ட ஆங்கில தினப் பேச்சுப் போட்டிகள் யாவும் எதிர்வரும் 25-ம் திகதி திங்கட்கிழமை யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஏ)

செல்லா சினிமா- யாழ்ப்பாணம்
சிவகார்த்திகேயன், ஆத்மியா மற்றும் பலர் நடிப்பில்

(22 முதல் கார்த்தியின் சகுனி)
இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு
10.30, 2.30, 6.30, 9.30
D.T.S

# இன்று ஒரு தகவல்

## உள்ளே இருக்கிற உண்மை

ஒரு காட்டில் குரங்கும் கழுதையும் நண்பர்கள். எங்கு போனாலும் சேர்ந்தே போவார்கள்; வருவார்கள்.

ஒருநாள் அப்படி போய்க் கொண்டிருந்தார்கள்.

அவ்வேளையில் அந்தக் கழுதைக்கு சற்று கவலை ஏற்பட்டது. உடனே பேச ஆரம்பித்தது.

"அதோ பார்... அங்கே ஒரு புதர் தெரிகிறதல்லவா? அந்தப் புதருக்குள் ஒரு சிங்கம் இருக்கிறது. அந்தப் பக்கமாக நான் போகும்போதும் வரும்போதும் அது என்னிடம் வம்பு வளர்க்கிறது... தகராறு செய்கிறது. என்மேல் பாய்கிறது... என்னைத் தாக்குகிறது. ஏன் என்பது தெரியவில்லை...!

இதைக் கேட்டதும் அந்தக் குரங்கு சொன்னது;

"இனிமேல் கவலைப்படாதே... இந்தத் தடவை நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்!" என்றது.

அதன்பின் ஒருநாள் இருவரும் அந்தப் பக்கமாகச் சென்றார்கள்.

எதிர்பார்த்த மாதிரியே நடந்தேறியது.

உடனே இந்தக் குரங்கு என்ன செய்தது தெரியுமா?

''கிடு கிடு'' என ஒரு மரத்தில் ஏறி உட்கார்ந்து, கீழே கழுதையும் சிங்கமும் போடும் சண்டையை வேடிக்கை பார்த்தது.

சிறிது நேரம் கழித்து, அடிபட்ட காயங்களுடன் அந்தக் கழுதை மெதுவாக நடந்து வந்தது.

பின்னர் குரங்கும் மெல்ல மரத்தை விட்டுக் கீழே இறங்கியது. கழுதை கேட்டது;

"என்னைக் காப்பாற்றுவேன் என்று சொன்னாயே... ஆனால், சரியான நேரத்தில் காலை வாரி விட்டுவிட்டியே... நீ பாட்டுக்கு மரத்தில் ஏறி உட்கார்ந்து வேடிக்கை பார்த்திருக்கிறாயே... இது நியாயமா?" என்று தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தியது.

குரங்கு பரிதாபமாக அதைப் பார்த்து; "நான் சண்டையின் போது மரத்தில்தான் இருந்தேன். சண்டை போட்டதில் உன்னுடைய சத்தம் தான் அதிகமாக இருந்தது... அச் சத்தம் நீ சிரிக்கிற மாதிரி எனக்குக் கேட்டது... அதனாலே நீ வெற்றி பெற்று விட்டாய் என்று நினைத்தேன்..." என்றது.

இன்றைய உலகில் பலபேர் இப்படித்தான் இருக்கிறார்கள். எவன் வெற்றி பெறுகிறான்– எவன் தோற்றுக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் முகத்தைப் பார்த்துக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

அவன் பேசும் பேச்சை வைத்துக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

தோற்கிறவன் கூட சிரிக்கிற மாதிரி முகத்தை வைத்துக் கொள்கிறான்.

இன்றைய மனிதர்களிடையே ஏகப்பட்ட முரண்பாடு. பொய் முகங்களோடு உலவுகிறவர்கள்தான் அதிகம். உண்மை முகம் உள்ளே இருக்கிறது. எல்லாவற்றையும் நண்பர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது தவறு.

கடவுள் இவ்வுலகைப் படைத்துவிட்டு சிறிது காலம் இங்கே தங்கி இருந்தாராம். அப்போதுதான் அவருக்குப் புரிந்ததாம் இவ்வுலகில் தங்கி இருப்பது எவ்வளவு இடைஞ்சல் என்பது.

தினமும் மனிதர்கள் வந்து ஏதாவது புகார் சொல்லிக் கொண்டே இருந்தார்களாம்.

கடவுளுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஏகப்பட்ட குழப்பம்.

கிட்டத்தட்ட பைத்தியம் பிடிக்கிற அளவிற்கு ஆகிவிட்டது. எல்லோருடைய ஆசைகளையும் அவரால் நிறைவேற்ற முடியவில்லை.

ஒருநாள் தன்னுடைய அமைச்சரவையைக் கூட்டி ஆலோசனை நடத்தினார். "என்ன செய்யலாம்... சொல்லுங்கள்!" என்றார்.

"இதென்ன பிரமாதம்...? பேசாமலே இமயமலை அடிவாரத்திலே போய் உட்கார்ந்தால் நலமாக இருக்கும்'' என்று ஆலோசனை சொன்னார்கள்.

''அங்கேயும் மனிதர்கள் வர ஆரம்பித்து விடுவார்கள்'' என்று கடவுள் கூறினார்.

"சரி அப்படியென்றால் சந்திரனில் போய் இருக்கலாம்" என்றார்கள்.

"அங்கேயும் மனிதன் குடிவரப் போகிறான்" என்றார் கடவுள்.

''இதெல்லாம் நிரந்தரத் தீர்வு ஆகாது... இதிலிருந்து விடுபட வேண்டும். அதற்கு வழி கூறும்படியாக கடவுள் கேட்டார்.

ஒரு வயதானவர் காதோடு காதாக சொன்னார்; மனிதனால் அடைய முடியாத ஓர் இடம் உண்டு. அவனுள்ளே போய் மறைந்து கொள்வது தான். இதனால் உங்களுக்கு தொந்தரவு இருக்காது"

மனிதன் அகத்தினுள் இருக்கிற உண்மையைப் புரிந்து கொள்ளாமல் வெருண்டு கொண்டு அலைகிறான்.

உள்ளே இருக்கும் உண்மையைப் புரிந்தால் நாம் தன்னம்பிக்கையுடன் தலை நிமிர்ந்து வாழலாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மீள்குடியேறச் சென்ற மக்களிடம் காணி உறுதி கேட்டு படையினர் அடாவடி

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.குற்றச்சாட்டு

**(பூந்தோட்டம்)**

**வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்துள்ள மீள்குடியேறும் மக்கள் தமது சொந்தக் காணிகளைத் துப்புரவு செய்ய கனரக வாகனங்களுடன் செல்லும்போது அப்பிரதேச பாதுகாப்புப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு காணி அனுமதிப்பத்திரம் கோரப்பட்டுத் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.**

இத்தகைய சம்பவங்கள் தமிழ் மக்களின் மீள்குடியேற்றத்தைத் திட்டமிட்டே தடுக்கின்ற அரசின் வெளிப்பாடே என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

காணி அனுமதிப்பத்திரங்களுடன் வந்தால்தான் காணியைத் துப்புரவு செய்ய அனுமதிப்போம் என்று தெரிவிக்கப்பட்டு இராணுவத்தினரால் மக்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர். மிக நீண்ட கால யுத்தம் காரணமாக இம்மக்கள் தமது காணிகளுக்கான காணி அனுமதிப்பத்திரம் உட்பட இதர ஆவணங்களைப் பெற முடியாமலும் அதிலும் சிலர் அவற்றினை இடப்பெயர்வின் போது தொலைத்துள்ள நிலையில் கிராம அலுவலர் ஊடாக காணி அனுமதிப்பத்திரம் பெற்று பிரதேச செயலாளாரிடம் அதற்கான ஒப்புதலைப் பெற முடியாது அரச நிர்வாகத்திலும் குளறுபடிகள் நிலவுகின்றன.

இந்நிலையில் யுத்தம் ஓய்வுக்கு வந்தும் மீள்குடியேற முடியாதவாறு மக்கள் தமது காணிகளுக்குள் உட்புக தடுக்கப்பட்டு வருகின்றனர்.

போர் இடம்பெற்ற கடந்த முப்பது வருட காலமாக வவுனியா மாவட்டத்திலும் ஏனைய இடங்களிலும் பெரும்பாலான காணிகளுக்குப் பிரதேச செயலகங்களால் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் தற்போது வட மாகாண ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுக் கமைய காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதோ மாற்றுவதோ மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீள்குடியேறுவது எங்கிருந்து காணி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவது? அவர்கள் தமது காணிகளில் மீள் குடியேறுவது எவ்வாறு?

அத்துடன் இத்தகைய கெடுபிடிகள் தனியார் காணிகளுக்கு மட்டுமன்றி பொதுக் காணிகளான கோயில்கள், முன்பள்ளிகள் முதலானவற்றுக்கும் இவ்வாறே இராணுவத்தினால் காணி அனுமதிப்பத்திரங்கள் கோரப்படும் நடைமுறையே அமுலில் உள்ளன.

எனவே, அனைவருக்கும் காணி அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அத்துடன் எத்தகைய சிவில் நிர்வாகத்திலும் இராணுவத்தினரின் தலையீடு விலக்கப்படவும் வேண்டும் என சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

(அ-2-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 120 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 80-100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 90 | 300 |
| தக்காளி | 120 | 140 | 140 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 50 | 70 | 60 | 70 |
| கரட் | 100 | 160 | 120 | 170 |
| பூசணி | 60 | 80 | 50 | 60 |
| புடோல் | 60 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 45 | 50 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 100-120 | 100 | 170 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 110 | 90 |
| பாகற்காய் | 80-100 | 140 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | -- | 90 | 70 | -- |
| பயற்றங்காய் | 120 | 180 | 100 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 150 | 170 |
| பீற்றூட் | -- | 70 | 85 | 80 |
| கறிமிளகாய் | 140 | 140 | 170 | 200 |
| முருங்கைக்காய் | 110 | 200 | 100 | 160 |
| போஞ்சி | -- | 140 | 130 | 200 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 8 | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 150 | 70 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 20 | 15-20 |

# இராசி பலன்

21.06.2012
(ஆனி 07, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
துதியை முன்னிரவு 10.45 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 4.02 மணிவரை
இராகுகாலம் 1.24-2.54 மணிவரை
சுபநேரம் 7.24-8.54 மணிவரை

**மேடம்** நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், கௌரவமான நாள்.

**இடபம்** நிதி நிலை உயர்வடையும், மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மிதுனம்** காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கடகம்** இளமைக்கால நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**சிங்கம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், பெரிய மனிதர்களின் வருகையால் விருப்பங்கள் நிறைவேறலாம், வீட்டிற்கு விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு.

**துலாம்** தடைகள் விலகி தனவரவு பெருகும் நாள், காரிய வெற்றிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவ முன்வருவர், பொருளாதார நிலை உயர என்ன வழியென்று சிந்திப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், எதிலும் குறை கேட்க நேரிடலாம், மனப்பதற்றம் அதிகரிக்கும், பயணங்களின் போது விழிப்புணர்வு தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தாராளமாகச் செலவு செய்து மகிழும் நாள், உறவினர் சிலரை தேடிச் சென்று சந்திப்பீர்கள்.

**மகரம்** உற்சாகத்தோடு பணி புரியும் நாள், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், பகைவர்கள் விலகுவர், பாக்கிகள் வசூலாகலாம்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், முன்னோர் சொத்துக்களால் நன்மையுண்டு, பூர்வ புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**மீனம்** கல்வியில் நாட்டம் காட்டுவீர்கள், சுபசெலவுகள் அதிகரிக்கும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டும் எண்ணம் மேலோங்கும், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள்.

வளவன்

# இன்று நடைபெறவிருந்த வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு தற்காலிக இடைநிறுத்தம்

## மருத்துவ சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஜெயக்குமாரின் வீட்டில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பின்னணியை விரைவில் கண்டறியுமாறு கோரி இன்று நடைபெறவிருந்த வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு நோயாளிகளின் நலனைக் கருத்திற் கொண்டு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் எவ்வித அழுத்தங்களுக்கும் அடிபணிந்து நாம் எமது பணிப்புறக்கணிப்பினை நிறுத்தவில்லை என யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.**

கடந்தவாரம் வைத்தியர் ஜெயக்குமாரின் வீடு தாக்கப்பட்ட சம்பவத்தினை கண்டித்து யாழ்.மருத்துவர் சங்கத்தின் ஏற்பாட்டில் அனைத்து வைத்தியர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பணிப்புறக்கணிப்பின் போது மருத்துவர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் அடுத்த வாரத்திற்குள் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கைது செய்யாவிட்டால் மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம் என எச்சரித்திருந்தனர்.

இந்நிலையில் இன்று நடைபெறவிருந்த பணிப்புறக்கணிப்பு நோயாளிகளின் நலனைக் கருத்திற்கொண்டும் யாழ்.மருத்துவ சங்கத்தின் தாய்ச்சங்கத்தின் வேண்டுகோளிற்கிணங்கவும் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

இதைவிட சுகாதார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளின் யாழ்.போதனா வைத்திய சாலையின் முறைகேடுகள் தொடர்பான விசாரணைகள் முடிவுற்றுள்ள நிலையில் அவ் விசாரணையின் முடிபுகளின் படியும் நாம் பணிப்புறக்கணிப்பை தொடர்வதா? நிறுத்துவதா? என்ற முடிபினை எடுக்கமுடியும்.

மேலும் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீ.குகனேசன், யாழ். மருத்துவ சங்கத்திடம் விசாரணைக்கு சிறிது காலம் அவகாசம் தேவையாக உள்ளது என்றும் விசாரணையை முடியும் வரையும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வேண்டாம் எனவும் கேட்டிருந்தார்.

இதன் அடிப்படையிலேயே யாழ். மருத்துவ சங்கம் அனைத்து தரப்பினரிடமும் கால அவகாசத்தினை வழங்கும் நோக்கில் இப் பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் இவ் விசாரணைக்கான கால இடைவெளி நீடிக்குமானால் எதிர்வரும் திங்கட் கிழமை இது தொடர்பில் மருத்துவ சங்கம் ஆராயும் என யாழ். மருத்துவ சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-2-4)

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெறுகின்றது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

மேலும் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை தினமும் மாலை 6 மணிக்கு சொற்பொழிவும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)




# 282 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்; 42 ஆசிரியர்கள் மட்டுமே வருகை

## வட. கல்வி வலயத்தில் அவலம்

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையினால் மாணவர்களின் கல்விச் செயற்பாடு பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்து அண்மைக்காலத்திற்குள் 282 ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன் வெளியிடங்களில் இருந்து 42 ஆசிரியர்கள் மட்டுமே மீள்நிரப்புகைக்காக வடமராட்சி வலயக் கல்வி பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு வந்துள்ளனர்.

இதனால் நீண்ட காலமாக நிலவிவந்த ஆசிரியர் பற்றாக்குறை மேலும் அதிகரித்துள்ளது.எனவே சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

# வடமராட்சி கிழக்கு பகுதியில் ஆளும் வர்க்கத்தின் அடாவடி

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படாதுள்ள சுண்டிக்குளம் கிராம சேவையாளர் பிரிவிற்கு வடமராட்சி கிழக்கு பிரதேசத்தை சேர்ந்த எந்த மக்களையும் இராணுவத்தினர் அங்கு செல்ல அனுமதிப்பதில்லை.

ஆனால், தற்போது தென்னிலங்கையில் இருந்து அரச அதிகாரிகளினது இராணுவத்தின் உயரதிகாரிகளினதும் செல்வாக்கை பயன்படுத்தி இப்பிரதேசத்திற்கு வரும் தென்னிலங்கை கடல் அட்டை தொழிலாளர்கள் அப்பிரதேசத்திற்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

இதனால் அப்பகுதியை அண்டியுள்ள கிராம கடல் தொழிலாளர்கள் மிகவும் நெருக்கமான கடற் பிரதேசத்திற்குள்ளேயே தமது கடற்றொழிலை மேற்கொள்ள வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் இந்தப் பிரதேச கடற்றொழிலாளர்களிடையே பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன.

எனவே, உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கையை மேற்கொண்டு இப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்தவும் உதவ வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இருப்பினும் இதுபோன்ற நில அபகரிப்புக்கள் மற்றும் தென்பகுதி மக்களுக்கான பக்கச் சார்பான நிலைமைகள் தொடர்பில் நேற்று முன்தினம் வலி.வடக்கு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போதும் அதனை பொலிஸார் தடுத்ததோடு மட்டுமல்லாது கழிவு ஒயிலையும் ஊற்றினர்.

இந்நிலை இவ்வாறு இருக்கையில் நில அபகரிப்பைக் கண்டித்தும் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும் திருமுறிகண்டியில் எதிர்வரும் 26 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்திற்கு கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.(அ-3-64)

# வழங்கப்பட்ட மின்விளக்குகள் எங்கே? சபை உறுப்பினர்களிடம் மக்கள் கேள்வி

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மின் விளக்குகள் இன்னமும் உரிய இடங்களுக்கு பொருத்தப்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமராட்சி பிரதேச சபை மற்றும் நகர சபைகளினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு மின் விளக்குகள் பொருத்தப்பட வேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

எனினும் சில சபை உறுப்பினர்கள் மின் விளக்குகள் சபையினால் வழங்கப்பட்ட போதும் அம் மின்விளக்குகளை வீதிகளுக்கு பொருத்தாமல் தமது வீடுகளில் வைத்திருப்பதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே மக்களின் தேவைகள் பூர்த்தியடையாததால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# வாக்காளர் படிவம் நிரப்புவதில் யாரையும் தவற விடாதீர்கள்

## உதவித்தேர்தல் ஆணையாளர் ஆலோசனை

(நல்லூர்)

யாழ். மாவட்டத்தில் வாக்காளர் இடாப்பு விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாக்காளர் இடாப்பு கிராம அலுவலகங்கள் ஊடாகவே வழங்கப்பட்டு வருகின்றதுடன் கிராம அலுவலர்களே வீடு வீடாகச் சென்று படிவங்களை வழங்கி வருகின்றனர்.

வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்து செல்கின்றமையாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்கள் தாம் வழங்கும் படிவங்களை மீளவும் தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டுமென உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அச்செயற்பாடு சரியான முறையில் நடைபெறுகின்றனவா என்பதை யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர்களையும் கண்காணிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-134)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வண்ணார்பண்ணைப் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11 மணி தொடக் கம் பிற்பகல் ஒரு மணிவரை கே.கே.எஸ்.வீதி கலைமகள் சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப் படும். (2-9)

# நிரந்தர அரசியல் தீர்வை காண்பதற்கு வெகுவிரைவில் மாநாடு நடத்தப்படும்

## ஐ.நாவுக்கும் அறிவிப்போம்-மாவை கர்ஜிப்பு

(தெல்லிப்பழை)

அபகரிக்கப்பட்ட நிலங்களை மீட்பதற்கும் நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கும் வெகுவிரைவில் மாநாடு ஒன்று நடத்தப்படும். ஐ.நாவினுடைய மனித உரிமை பேரவைக்கும் அறிவித்தல் கொடுப்போம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்மாநாட்டிற்கு எங்களுடன் இணைந்துள்ள அனைத்துக் கட்சிகளையும் அழைப்பதுடன் அதற்கு அப்பால் சென்று ஜனநாயக ரீதியாக போராடுகின்ற கட்சிகளையும் இணைத்துக் கொள்வோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் மக்களை கலந்துகொள்ள வேண்டாம் என்று அரசினுடைய கையாட்கள் தடுத்துள்ளமையை நாம் அறிந்துள்ளோம். இதனை செய்பவர்கள் செய்யட்டும் நாங்கள் அனைவரும் திடசங்கற்பத்துடன் இருப்போம்.

எங்கள் மத்தியில் இடம்பெறும் நில ஆக்கிமிப்புக்கள், அச்சுறுத்தல்கள், தடைகள் குறித்து சர்வதேச சமூகம் உட்பட அனைவருக்கும் அறிவித்தல் கொடுப்போம். ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்வோம். அரசுக்கும் அறிவித்தல் கொடுப்போம். ஐ.நாவுக்குச் செல்வோம். ஐ.நா. மனித உரிமை ஆணையத்திற்கு அறிவித்தல் கொடுக்கப் போகின்றோம்.

இன்றுடன் எமது போராட்டம் முடிந்துவிடாது. பொலிஸாரும் இராணுவமும் எம்மைக் கட்டுப்படுத்துவது நியாயம் இல்லை. உச்ச நீதிமன்றமும் உலகமும் எங்களுக்கு பலமாக இருக்கின்றன.

எங்களுடைய இலட்சியம் எங்களுடைய வீட்டுக்கு, எங்களுடைய மண்ணுக்கு நாங்கள் போக வேண்டும். எங்கள் மண்ணை ஆக்கிரமித்துள்ள இராணுவம் இடத்தை விட்டு வெளியேற வேண்டும். அதுதான் எங்களுடைய அடிப்படை நாதமாக இருக்கிறது. இதற்காக நாங்கள் எல்லோரும் போராடுவோம்.

இன்று. எமது போராட்டத்தின் போது மகஜர் வழங்க அனுமதி மறுத்திருந்தால் இவ்விடத்தில் உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் செய்திருப்போம். இது ஆரம்பமான நிகழ்ச்சி இப்போது அரசுக்கு ஒருமாத கால அவகாசம் கொடுத்துள்ளோம். இதற்குள் ஓர் முடிவு வழங்க வேண்டும்.

மேலும் பாராளுமன்றத்தில் இதற்கான பிரேரணை சமர்ப்பிக்கவுள்ளோம். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தவிர ஏனைய தென்பகுதி அமைச்சர்கள் இதனைப் பரிசீலிப்பதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். ஆனபடியால் யார் இதற்கு தடையாக இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இடம்பெயர்ந்த மக்களை யாரும் கைவிடவில்லை. புலம்பெயர்ந்து வாழும் மக்களும் எமது உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# இலங்கையை சமாதானப்படுத்த சிவ்சங்கர் மேனன் வருகிறார்

## இந்திய ஊடகம் தகவல்

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இம் மாத இறுதியில் இலங்கைக்கு மேற்கொள்ளும் பயணத்துக்கும், பிரேஸிலில் நடைபெறும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்- ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இடையிலான சந்திப்புக்கும் தொடர்பில்லை என்று இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம் தொடர்பாக விவகாரங்களின் தொடர்ச்சியாகவே சிவ்சங்கர் மேனனின் கொழும்புக்கான பயணம் இடம்பெறுவதாக இந்திய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சிவ்சங்கர் மேனனின் கொழும்பு பயணத்துக்கும் பிரேஸிலில் நடைபெறும் றியோ 20 பிளஸ் மாநாட்டில் மன்மோகன் சிங்- மகிந்த ராஜபக்ஷசந்திப்புக்கும்தொடர்பில்லை.

இந்தச் சந்திபபு மிகவும் குறுகிய தொன்றாகவே இருக்கிறது என்றும் அந்த அதிகாரி இந்திய ஊடகத்திடம் மேலும் கூறியுள்ளார். இலங்கைக்கு மிகவும் நெருக்கமான நட்பு நாடாக இந்தியா இருந்து வருகின்றது.

ஆனாலும் ஜெனீவா தீர்மானத்தை இந்தியா ஆதரித்த பின்னர் கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான உறவுகளில் தேக்க நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையைத் தொடரவிடாமல் உறவுகளை சீர்படுத்துவதே சிவ்சங்கர் மேனனின்கொழும்புப் பய ணத்தின் நோக்கமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (அ-2)

# பங்குதாரர்களுடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை பங்குதாரர்களுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் கைத்தொழில் பேட்டையில் காணிக்கு விண்ணப்பித்த கைத்தொழிலாளர்களின் கோரிக்கைகள், மத்திய வங்கிகள், யூ.எஸ்.எயிட் நிறுவனத்தால் கைத்தொழில் பேட்டை காணிகளுக்கு விண்ணப்பித்த கைத்தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடிய கடன் மற்றும் நன்கொடைகள் தொடர்பான விபரங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே, மேற்குறித்த கலந்துரையாடலில் தாங்கள் தவறாது சமுகமளித்து தங்களின் மேலான கருத்துக்களை தெரியப்படுத்துவதுடன் தங்கள் தொழிலை ஆரம்பிப்பதற்கு தேவையான உதவிச் சேவைகளை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் பற்றியும் அறிந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண கைத்தொழில் அபிவிருத்தி சபை, பிரதிப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் கேட்டுள்ளார்.

(அ-9)


மணிபல்லவத்தில் மஹோற்சவம்



நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

இன்று மூன்றாம் திருவிழா

நயினையில் நல்லாட்சி புரிபவளே

நயினையில் நல்லாட்சி புரியும் எங்கள்
நாகபூஷணி அன்னையே
உனை நினைக்கும் பக்தர்க்கு என்றும்
துன்பங்கள் இல்லையே
உன் பார்வை பட்டால் விலகிடும் எம்
வாழ்வில் தொல்லையே
எம் வாழ்வில் நலம் சேர்ந்திடும் அன்னையே!

பருத்தித்துறை சு.ஜெயருபன்

சுந்தரத்தைத் தந்திடம்மா !

ஏழிசையாய் இசைப் பயனாய்
எழில் கொஞ்சும் பூரணியாய்
நாளெல்லாம் நமக் கருளும்
நயினை நகர் நாயகியே!
தாழ்வில்லா வாழ்வு பெற்று
தரணியில் நாம் வாழ
சூழும் தீ வினை களைந்து
சுந்தரத்தை தந் திடம்மா!

கூத்தாடி வி.சி குஞ்சிதபாதம்



ஸ்ரீதேவி கருமாரி
நகை மாடம்


பெண்ணுக்கு பொன்னழகா?
பொன்னுக்கு பெண்ணழகா?

83/01, கஸ்தூரியார் வீதி,
செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே:-0215672567


# நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம்

(பூந்தோட்டம்)

நான்கு அம்சக் கோரிக்கையை முன்வைத்து வவுனியா நகரசபை சுத்திரகரிப்பு தொழிலாளர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.



ஓய்வுபெற்ற சுத்திகரிப்பு ஊழியர்களின் வெற்றிடத்தை வழங்குதல், சுகாதார தொழிலாளர்களாக கடமையாற்றும் ஊழியர்கள் சாரதி கடமையில் உள்ளவர்களுக்கு சாரதி நியமனம் வழங்குதல், சுகாதார பாதுகாப்பு கவசங்கள் வழங்கப்பட வேண்டும், பல வருடமாக தற்காலிகமாக கடமையாற்றுபவர்களுக்கு நிரந்த நியமனம் வழங்கக் கோரி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது,

கடந்த மே மாதம் 11 ஆம் திகதி மற்றும் இம் மாதம் 6 ஆம் திகதி நகர சபை தலைவர் மற்றும் சபைக்கு தாம் கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்ததாகவும் இவ்விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நேரம் கேட்டும் எவ்வித பதிலும் தமக்கு வழங்கப்படாமையினாலேயே இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் பல்வேறான இடர்பாடுகள் மற்றும் அரசியல் புறக்கணிப்புக்களுக்கு மத்தியிலும் பெண் ஊழியர்கள் மீதான துன்புறுத்தல்களுக்கு முகம்கொடுத்த நிலையிலும் தாம் கடமையாற்றி வந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இக்கடிதத்தின் பிரதிகள் அரசாங்க அதிபர், பொலிஸ் அத்தியட்சகர், நகரசபையின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களுக்கும் அனுப்பபட்டுள்ளது. (அ-9-266)

# நில அபகரிப்பை தொடர்ந்து திருமுறிகண்டியில் போராட்டம்

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அழைப்பு

(கிளிநொச்சி)

யுத்தம் முடிந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமிழர் வாழும் பகுதியில் இடம்பெற்று வருகின்ற நில அபகரிப்பை எதிர்த்து அதனைக் கண்டிக்கத் தக்க வகையில் எதிர்வரும் 26 ஆம் திகதி முறிகண்டி ஆலய முன்றலில் காலை 10 மணிக்கு கவனயீர்ப்பு உண்ணாவிரதப் போராட்டமொன்றை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நடத்தவுள்ளது.

இதற்கமைய உண்ணாவிரதப்போராட்டத்தில் கட்சி வேறுபாடுகள் களைந்து இன விடுதலைக்காக் அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்ட மக்களும் ஒன்றிணைந்து முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அழைப்பினை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

உலக ஓட்டத்திற்கு தன்னை ஒரு மிகை ஜனநாயகவாதியாக காட்டிக்கொள்ளும் இலங்கை அரசாங்கம் மறுபுறத்தில் தமிழ் இனத்தின் சுயத்தை மெல்ல மெல்ல அழித்து காலக்கிரமத்தில் அந்த இனத்தையே இல்லாமல் செய்வதற்குரிய நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இதன் ஒரு பாகமாவே தமிழர் தாயகப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக்குடியேற்றங்கள், தேவையற்ற இராணுவ ஆக்கிரமிப்புக்கள், பௌத்த மயமாக்கல் போன்றன அமைந்திருக்கின்றன.

இன்று யுத்தம் முடிந்துள்ள நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்கள் எதற்காக என் கேள்வி எழுப்பப்பட்டுள்ள நிலையில் அவை அபாயகரமான பிரதேசங்கள் என்றும் கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் என்றும் நேரத்திற்கு ஒரு கதை சொல்லிக்கொண்டிருக்கின்றது.

இது போதாதென்று புதிதாக யுத்தத்தின் பின்னர் இப்பகுதியில் புலிகள் இருந்தனர். புலிகளுக்கு விற்கப்பட்டவை, புலிகளின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டவை என வகைப்பாடுகளை போட்டுக்கொண்டு நிலங்களை ஆக்கிரமித்து வைத்திருக்கின்றது.

மறுபுறத்தில் தொழிலுக்காக வந்து தங்கும் சிங்களவர்கள் சில நாட்களிலேயே நிரந்தர உரிமை கேட்டு, கேட்டவுடனேயே அவை வழங்கப்படுகின்றன.

அது மட்டுமல்லாமல் அவர்கள் குடியேறும் பகுதிகளில் அரசாங்கத்தினதும் இராணுவத்தினரும் அரச அமைச்சர்களினதும் ஆதரவுடனும் அனுமதிக்கடிதத்துடனும் விகாரைகள் முதற்கொண்டு பாடசாலைகள் வரை அமைக்கப்படுகின்றன.

இந்நிலையில் எங்கள் இனம் பாரம்பரியமாக வாழ்ந்த நிலங்களிலேயே அகதிகளாக அலைந்து திரிந்து கொண்டிருக்கின்றது.

இவற்றுக்கெதிராக போராடினாலோ, போராடத்தலைப்பட்டாலோ எம்மை ஒரு பிரிவினைவாதிகளாகவும் ஆயுத விரும்பிகளாகவும் உலகத்திற்கு சொல்லும் அரசாங்கம் அதைக்கொண்டே தான் செய்து வரும் அநியாயங்களை, இன அழிப்பை மூடி மறைத்துக்கொண்டிருக்கின்றது.

யுத்த காலத்திலும் அதற்குப் பின்னரும் கைது செய்யப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், காணாமல்போனவர்கள் குறித்து எந்தப் பதிலும் கிடையாது. இது குறித்து இலங்கை அரசுக்கு வக்காளத்து வாங்கும் அரசில் தலைமைகளுக்கும் கேட்கத் திராணியில்லை.

இந்தநிலையில் ஆயிரமாயிரம் இளம் பெண்கள், பிள்ளைகள், குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன.

ஆனால் தங்களுடைய இனத்தில் கடும் குற்றம்சுமத்தி கைது செய்தவர்களையும் கூட மன்னிப்ப வழங்கி விடுதலை செய்துள்ளனர். ஆனால் சாதாரணமாக பற்றரி கொண்டு வந்தவர்கள் கூட விசாரணையின்றி சிறைகளில் உள்ளனர்.

எனவே எம்மை ஒரு அடக்கப்பட்ட அடிமை இனமாகவே அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கின்றது.

ஆனால் இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. சாதாரணமாக ஐந்தறிவு ஜீவன்கள் கூட தங்கள் இருப்பிடத்தில் தன்னுடைய சுதந்திரப் பிரதேசத்திற்குள் நுழைந்து ஊறு விளைவித்தால் போராடுகின்றது.

நாங்கள் பாரம்பரியமான, பூர்வீகமான இனக்கூட்டம் மட்டுமல்ல எப்போதும் சுதந்திரமாக வாழ்ந்த இனமும் கூட. எனவே தொடர்ந்தும் இந்த ஆக்கிரமிப்புக்களை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

எதிர்வரும் காலங்களில் தொடர் போராட்டங்கள் இடம்பெறுமென அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# இலங்கையில் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதன் வாழ்ந்துள்ளான்


## தொல்பொருள் திணைக்களம் தகவல்

இலங்கையில் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஹோமோசபியன்ஸ் மனிதன் வாழ்ந்தான் என்பதை களுத்துறை, புளத்சிங்களப் பகுதியில் உள்ள பகியங்கலவளைவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வரலாற்றுக்காலத்துக்கு முந்திய மனிதனின் எலும்புக்கூடு உறுதி செய்துள்ளதாக தொல்பொருள் திணைக்கள பிரதி பணிப்பாளர் கலாநிதி நிமால் பெரேரா தெரிவித்துள்ளார்.

சில நாட்களுக்கு முன்னர் இந்தப் பிரதேசத்தில் வரலாற்றுக்கு முந்திய கால மனிதனின் முழுமையான எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது.

இதையடுத்து நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் ஆதி மனிதனின் மேலும் பல சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவனது உணவுப்பொருட்கள், சடங்குகள் தொடர்பான பொருட்கள், கல்லினால் ஆன கருவிகள் குறித்த சான்றுகளும் கிடைத்துள்ளன. மணிகளால் செய்யப்பட்ட நகைகள், மிருக எலும்பில் செய்யப்பட்ட ஆயுதங்களும் அகழ்வாய்வாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். (அ-2)





# வெற்றிலைக்கேணி அந்தோனியாருக்கு திருவிழா நாளை

(பொற்பதி)

வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நற்கருணை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து புனிதரின் திருச்சுருவ ஆசீர்வாதமும் நடைபெறும்.

கடந்த 6 வருடங்களின் பின்னர் மேற்படி ஆலயத்தில் திருவிழாத்திருப்பலியும் நிகழ்வுகளும் இங்கு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2-3-64)

# அலங்கார மின்குமிழ்களை அறுத்துச் செல்லும் விசமிகள்

திருவிழாக்காலங்களில் ஆலய வீதிகளில் பொருத்தப்படும் அலங்கார மின்குமிழ்களை இனந்தெரியாத விஷமிகள் இரவு நேரங்களில் அறுத்துச் செல்கின்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றன.


இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு ஆனைக்கோட்டை கண்ணகை அம்பாள் திருக்கோவிலில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கோவிலை அண்மித்த பகுதிகளில் சில இளைஞர் குழுக்கள் வீதியில் பொருத்தப்பட்டுள்ள வீதி மின்குமிழ்களினை உடைத்து நாசப்படுத்துவதுடன் அலங்கார மின்குமிழ்களினை அறுத்துச் செல்கின்றனர்.

இவ்வாலயத்தின் ஒவ்வொரு வருட திருவிழாக்காலங்களின் போதும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவங்கள் திருட்டு முயற்சியாக இல்லாமல் ஆலய திருவிழாவிற்கு பங்கம் விளைவிக்கும் நோக்குடனேயே இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2-4)

# ஆளணிப்பற்றாக்குறையுடன் முல்லை பேருந்து நிலையம்



இலங்கைப்போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு பேருந்து நிலையம் பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது.

கடந்த 1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சாலையானது தற்போதைய மீள்குடியேற்றத்தின் பின் கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளது:

கடந்த 1990 ஆம் ஆண்டிற்கு முன் 32 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. தற்போது 9 பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன. இவ் 9 பேருந்துகளுக்கும் 14 சாரதி தேவைப்படுகின்ற வேளையில் 9 சாரதிகளே பணிபுரிகின்றனர். அத்துடன் 14 நடத்துநர்கள் தேவைப்படுகின்ற வேளையில் 10 நடத்துநர்களே கடமையாற்றுகின்றனர். எனவே இவ் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். இப்பேருந்து நிலையத்தில் குடிநீர் வசதி, மின்சார வசதி இன்றி பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பேருந்துசாலைக்கு அருகில் எரிபொருள் நிரப்பு நிலையம் இருத்தல் அவசியம். ஆனால் இச்சாலைக்கு அருகில் எரிபொருள் நிரப்பு நிலையம் இல்லை. ஆளணிப் பற்றாக்குறை காரணமாக பாடசாலைக்கான பேருந்து சேவையில் இடம்பெறுவதில்லை. இப்பேருந்து நிலையம் கடந்த 1990 ஆண்டிற்கு முன் வடமாகாணத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு வருவாயை ஈட்டிக்கொடுத்துள்ளது. எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு இப்பேருந்து நிலையத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து போக்குவரத்திற்கு உதவுமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# கிளி, முல்லை மாவட்டங்களில் சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள்

வட பகுதியில் சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலைமைக்கு உட்படுத்தப்படுவதை தடுப்பதற்கு பாதுகாப்பு நிலையங்களை அமைக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பு நிலையங்களை அமைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திசாநாயக்க குறிப்பிட்டார்.

சிறுவர்கள் பாடசாலையில் இருந்து வீடு திரும்பியதன் பின்னர் பாதுகாப்பற்ற நிலை

### அனோமா திஸாநாயக்க

மைக்கு தள்ளப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனைத் தடுப்பதற்காக அமைக்கப்படும் இந்த பாதுகாப்பு நிலையங்களில் பாடசாலை நிறைவுபெற்று வீடு செல்லும் சிறுவர்கள் மாலையில் பாதுகாப்பாக பராமரிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பாதுகாப்பு நிலையங்களை கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார். (அ-9)

# கியூபாவில் கைகூடாத மஹிந்தவின் கனவு; காஸ்ட்ரோவை சந்திக்கும் முயற்சி தோல்வி

கியூபாவுக்கு அதிகாரபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடெல் காஸ்ரோவைச் சந்திக்க முயன்றபோதும் அந்த முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிடெல் காஸ்ரோ உலகில் மதிப்புக்குரிய தலைவர்களில் ஒருவராக கருதப்படுகிறார். தற்போது ஓய்வில் உள்ள அவர் கியூபாவில் இப்போதும் செல்வாக்குமிக்க ஒருவராகவே திகழ்கிறார்.

இவரைச் சந்தித்துப் பேச ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சின் ஊடாக முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஆனால், அவரது கியூபா பயணத்தின் போது பிடெல் காஸ்ரோவை சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

கியூபா சென்ற பல வெளி நாட்டுத் தலைவர்களை பிடெல் காஸ்ரோ சந்தித்த போதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவர் சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் கியூபாவின் தற்போதைய ஜனாதிபதி பிடெல் காஸ்ரோவின் சகோதரருமான ரவுல் காஸ்ரோ, துணை ஜனாதிபதி மரினோ முரிலோ ஜோர்ஜ் ஆகியோரை மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (அ-2)

# சூதாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(கொழும்பு)

நட்சத்திர ஹோட்டலொன்றில் சட்டவிரோத சூதாட்டத்தில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்ட 11 நபர்களுக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. மேற்படி நபர்கள் குறித்த ஹோட்டலில் நிர்மாணத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் என அடையாளம் காணப்பட்டனர். ஹோட் டல் வளாகத்திற்குள் அவர்கள் சூதாட்ட நிலையமொன்றை நடத்தியதாகவும் சட்டவிரோத சூதாட்டத்தில் ஈடுபட்டதாகவும் நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர்கள் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதையடுத்து நீதவான் கனிஷ்க விஜேரட்ன தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார். (அ-2)

# துமிந்தவிடம் வாக்குமூலம் பெறுவதற்கு சாதக நிலை

வெளிநாட்டு வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் ஆளும் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தற்போது தேறி வருவதாக அவருடைய சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் துமிந்த சில்வா தலையில் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகி கடந்த 8 மாதங்களுக்கும் மேலாக வெளிநாட்டு வைத்தியசாலையொன்றில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றார்.

பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றின் மேலதிக நீதவான் மஞ்சுல கருணாரத்னவின் முன்னிலையில் துமிந்த சில்வாவின் சட்டத்தரணி இந்த விடயங்களை வெளிப்படுத்தியிருந்தார்.

குறித்த வழக்கு மீதான அடுத்தகட்ட விசாரணைகள் எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (அ-2)

# வெலிக்கடை சிறையில் பரிசோதனை தீவிரம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடமையாற்றிவரும் உத்தியோகத்தர்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சிறைச்சாலையில் கடமையாற்றிவரும் உயர் அதிகாரிகள் முதல் சாதாரண உத்தியோகத்தர்கள் வரையில் அனைவரும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பாதணிகளைக்கூட கழற்றி சோதனை நடத்தப்பட்டுள்ளது. 20 தொடக்கம் 30 ஆண்டுகள் கடமையில் ஈடுபட்டிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களைக்கூட பயிலுநர் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சோதனையிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து மூன்று கைதிகள் அண்மையில் தப்பிச்செல்ல முற்பட்டதைத் தொடர்ந்து சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் சிறைச்சாலை உயரதிகாரிகள் மற்றும் நலன்புரி உத்தியோகத்தர்கள் சோதனைக்கு உட்படுத்தப்படாமை அதிருப்தி அளிப்பதாக சில அதிகாரிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ-2)

# ஆசிய- ஆபிரிக்க சட்ட மாநாட்டில் ஹக்கீம்

(கொழும்பு)

நைஜீரியாவின் அபூஜா நகரில் தற்பொழுது நடைபெறும் ஆசிய - ஆபிரிக்க சட்ட ஆலோசனை மன்றத்தின் 51 ஆவது மாநாட்டில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டுள்ளார்.

ஆசிய- ஆபிரிக்க சட்ட ஆலோசனை மன்றத்தின் தலைவர் என்ற வகையில் இந்த மாநாட்டில் ஆரம்ப உரையை அவர் ஆற்றினார்.

ஆசிய- ஆபிரிக்க கண்டங்களைச் சேர்ந்த மேற்படி அமைப்பின் அங்கத்துவ நாடுகள் எதிர்நோக்கும் சட்ட ரீதியான பல்வேறு பிரச்சினைகளை இதன்போது விபரித்து கூறினார்.

அத்துடன் வியட்நாம் மற்றும் கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளையும் இந்த அமைப்பில் இணைத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் முன்மொழிந்தார்.

47 நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பின் தலைமையகம் இந்தியாவின் புதிடில்லி நகரில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




★ 1621-பிராக் நகரில் 27 உயர்குடி செக் இனத்தவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1734-கியூபெக்கில் மொண்ட்றியால் நகரில் மரி- ஜோசெப் அஞ்சலிக் என்ற கறுப்பின அடிமைப் பெண் அவளது எசமானின் வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தியமைக்காகவும் அதனால் நகரின் பெரும்பகுதி அழிந்தமைக்காகவும் குற்றம் சாட்டப்பட்டு மக்கள் மத்தியில் சித்திரவதை செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டாள்.

★ 1788-நியூ ஹாம்சயர் ஐக்கிய அமெரிக்காவின் 9 ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1798- ஐரியத் தீவிரவாதிகளின் எழுச்சி பிரித்தானியாவினால் முறியடிக்கப்பட்டது.

★ 1898-குவாம் தீவை ஐக்கிய அமெரிக்கா ஸ்பெயினிடம் இருந்து கைப்பற்றியது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பிரான்ஸ் ஜேர்மனியிடம் வீழ்ந்தது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: லிபியாவின் டொப்ரூக் நகரம் இத்தாலி மற்றும் ஜேர்மனியப் படைகளிடம் வீழ்ந்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஒகினவா சண்டை முடிவுற்றது.

★ 1970-பிரேசில் இத்தாலியை 4-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை வென்றது.

★ 1999-அப்பிள் கணனி நிறுவனம் தனது முதல் ஐ.புக் இனை வெளியிட்டது.

★ 2002-உலக சுகாதார நிறுவனம் ஐரோப்பாவை போலியோ நோய் அற்ற கண்டமாக அறிவித்தது.

★ 2004- விண்கப்பல் ஒன்று (Space Ship One) தனது முதலாவது தனியாரினால் ஆதரவளிக்கப்பட்ட விண் பயணத்தை முடித்துக் கொண்டது.

★ 2006-புளூட்டோவின் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட துணைக் கோள்கள் நிக்ஸ் மற்றும் ஹைட்ரா எனப் பெயரிடப்பட்டது.

**பிறப்புக்கள்**

★ 1905-ஜான் பவுல் சாட்டர், பிரெஞ்சு எழுத்தாளர், தத்துவவாதி, நோபல் பரிசு பெற்றவர் (இ.1980)

★ 1947-ஷிரின் எபாடி, நோபல் பரிசு பெற்ற ஈரானியர்

**இறப்புக்கள்**

★ 1970-சுகர்னோ, இந்தோனேசியாவின் ஜனாதிபதி (பி. 1901)

★ 2001-கே.வி.மகாதேவன், இசையமைப்பாளர் (பி. 1918)

**சிறப்பு நாட்கள்**

★ கிறீன்லாந்தின் தேசிய தினம்

★ World Humanist Day



★ 1953-பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ- பிறந்த தினம்

# வீதிப்புனரமைப்பால் மக்களை துரத்தியடிக்கும் தூசுப்படலம்

(முல்லைத்தீவு)

மாங்குளம் சந்தியில் இருந்து வெள்ளாங்குளம் நோக்கிச் செல்லும் பிரதான வீதியின் புனரமைப்பு வேலைகள் துரிதகதியில் இடம்பெறாமையால் மக்கள் பெரும் சிரமங்களைஎதிர்கொள்ளவேண்டியுள்ளது.

இவ்வீதி 35 கிலோமீற்றர் தூரம் கொண்டது. இவ்வீதிக்கு இடப்படும் கிரவலானது தூசு நிறைந்து காணப்படுவதால் நீர் ஊற்றி செப்பனிடப்படவேண்டும். ஆனால், நீர் ஊற்றாது செப்பனிடுவதால் பயணிகள் தூசுகளுக்கு மத்தியில் பயணிக்க வேண்டியுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களும் தூசு படிந்த உடையுடன் பயணிக்க வேண்டியுள்ளது.

பலமாக காற்று வீசும் இவ்வேளையில் இத்தூசு பரவுவதால் இவ்வீதியால் பயணிப்போர் மட்டுமன்றி வீதிக்கு அருகில் இருப்போரும் நோய்வாய்ப்பட நேரிடுகின்றது.

அத்துடன் வீதியோரத்திலுள்ள உணவகங்களும் பாதிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே, உரிய தரப்பினர் தூசுகள் பரவாதவாறு நீரூற்றி விரைவாக வீதியைச் செப்பனிடுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(அ-3-267)

# உங்களுக்கு தெரியுமா? போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய மட்டத்தில் உங்களுக்கு தெரியுமா? போட்டி அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் எழுத்துப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளுக்கு அமைவாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் வவுனியா தெற்கு வலய மட்ட பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார்.

வலய மட்ட பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

சி.பவதாரணி (வவு/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), சு.கோகிலன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ப.துவாரகா (இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), யோ.டிசாந் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), பா.சஞ்ஜை (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), இ.லவகீர்த்தனன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), தெ.கேசவி (வவு/ இறம்பைக்குளம் மகளிர் மகா வித் தியாலயம்).

(அ-3-266)

# தனியார் மருத்துவக் கல்லூரிக்கு வாசு, தினேஷ் கூட்டாக எதிர்ப்பு

(கொழும்பு)

தனியார் மருத்துவக் கல்லூரி அமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஆளும் கட்சியின் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் இலவச கல்வி முறைமையை பாரியளவில் இந்த உத்தேசத் திட்டம் பாதிக்கும் என அதிருப்தி வெளியிட்டுள்ளனர். ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழுக்கூட்டத்தில் அமைச்சர்கள் இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்

தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைப்பது இலங்கைக்கு பொருத்தமானதாக அமையாது என சுட்டிக்காட்டியுள்ளனர். மேலும் மாணவர்களின் கல்வித்தரம் பற்றிய சர்ச்சைகளும் எழக்கூடிய அபாயம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பதன் மூலம் ஏற்படக்கூடிய நன்மை, தீமைகள் குறித்து பாராளுமன்றில் விவாதம் நடத்தப்படவுள்ளது .(அ-2)

## யெகோவாவின் சாட்சிகள் மாநாடு வட்டார மாநாடு

(வவுனியா)

கடவுளுடைய பெயர் பரிசுத்தப்படுத்துவதாக எனும் யெகோவாவின் சாட்சிகளுடைய வட்டார மாநாடு வவுனியாவில் உள்ள பூங்கா வீதி, கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் காலை 9.40 மணி தொடக்கம் பிற்பகல் 3.55 மணி வரை நடைபெறவுள்ளது.

அதேவேளை, அர்ம கெதோனில் யெகோவா தமது மகத்தான பெயரைப் பரிசுத்தப்படுத்துவார் எனும் பொதுப் பேச்சும் நடைபெறும்.

இவ் வட்டார மாநாடு இம்மாதம் 30 மற்றும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதிகளில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

## தரம் III அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயத்தில் உள்ள தரம் III பாடசாலைகளின் அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா தெற்கு வலய முதல்நிலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல்களில் தரம் III பாடசாலைகளின் அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா அறிவித்துள்ளார்.

(அ-3-266)

## தொழில்நுட்பம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் காலை 8.30 மணிக்கு வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப பாடத்தைக் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா அறிவித்துள்ளார். (அ-3-266)

## புலமைப்பரிசில் மாணவர்களுக்கு விசேட செயலமர்வு

(பூந்தோட்டம்)

நாளைய இளைஞர்களுக்கான செயற்றிட்டத்தின் கீழ் வவுனியா தெற்கு வலய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலம், இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், செட்டிகுளம் மகா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

இவ் விசேட செயலமர்வில் வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள 2010 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக வவுனியா தெற்கு வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசபாதம் தெரிவித்துள்ளர். (அ-3-266)

## மீளாய்வுக் கூட்டம்

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலை மாண வர்களின் க.பொ.த. (சா/த), க.பொ. த.(உ/த) பரீட்சை அடைவு மட்டங்களை உயர்த்தும் விசேட செயற்றிட்ட மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வடமாகாண கல்வி திணைக்கள கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது.

இவ் விசேட செயற்றிட்ட மீளாய்வு கூட்ட த்தில் வடமாகாணத்தில் உள்ள சகல வலயங்களினதும் கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்வி பணிப்பாளர்களையும் விஞ்ஞானம், கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.(அ-3-266)

## கருமாரியம்மன் மஹோற்சவம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை ஸ்ரீ கருமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுமென பரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ-9-78)


HDFC GOLD LOAN

பொற் கடன்



உங்களது வீடமைப்பு வங்கியிடமிருந்து பெறுமதி மிக்க தங்கத்தைக் கொண்டு

- அதி கூடிய தொகைப் பணம் குறைந்த வட்டியுடன்
- அதி உயர் பாதுகாப்பு
- தங்க ஆபரணங்கள் நவீன தொழில்நுட்ப முறையினால் பரிசீலிக்கப்படல்
- உத்தரவாதமளிக்கப்பட்ட நம்பிக்கை
- நம்பகமானதும் நட்புறவுமான வாடிக்கையாளர் சேவை

*நிபந்தனைகளுக்குட்பட்டது

பாதுகாப்பு பெட்டக வசதி யாழ் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு

011 5737373

011 2356800

அல்லது அண்மையில் உள்ள HDFC வங்கிக் கிளையை நாடுங்கள்

HDFC BANK

www.hdfc.lk Email: hdfc@hdfc.lk

Fitch Rating - BBB+(lka)

(அ-30)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 164

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்



பெல்சன் -ஜேர்மனியரின் யூதப்படுகொலை முகாமில்-1945


ஏப்ரலிலும் சற்றும் குறையாத அளவு கடுமையான சண்டைகள் நடைபெற்றன. எதிரியின் கடும் எதிர்ப்பை உடைத்துக் கொண்டு துருப்புகள் ஏப்ரல் 21 ஆம் திகதி மொராவ்ஸ்க்-அஸ்த்ராவா வெளி தற்காப்பு வளையத்தை அடைந்து நகரின் நுழைவாயில்களில் சண்டையிலிறங்கின. சோவியத் போர்வீரர்களோடு சேர்ந்து செக்கோஸ்லொவாக்கியப் போர்வீரர்களும் போரிட்டனர். உதாரணமாக 38-வது படையோடு சேர்ந்து 1-வது தனி செக்கோஸ்லொவாக்கிய டாங்கிப் பிரிகேடின் டாங்கிகள் போரிட்டன. குறிப்பாக ஓதெர் ஆற்றின் கரையில் நடந்த சண்டைகளில் இவர்கள் எதிரியின் எண்ணற்ற பதிலடிகளை முறியடித்துச் சிறப்பாகச் செயற்பட்டனர். கடுமையான சண்டைகளுக்குப்பின் ஷிலினாவின் நுழைவாயில்களை அடைந்த 1-வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸ் 18-வது படையோடு சேர்ந்து இயங்கியது.

8-வது வான்படையும் இதனோடு கூட்டாகச் சேர்ந்து இயங்கிய 1-வது செக்கோஸ்லொவாக்கிய கலப்பு வான் டிவிசனும் தரைப்படைகளுக்குப் பெரிதும் உதவின. இவை 2589 வான் தாக்குதல்களைத் தொடுத்து எதிரியின் ஏராளமான ஆயுதங்கள், போர் வாகனங்கள் இராணுவத் தளவாடங்களை ஒழித்துக் கட்டின.

ஏப்ரல் 26 ஆம் திகதி மொராவ்ஸ்க- அஸ்த்ராவா நகரின் மீதான தீர்மானகரமான தாக்குதல் ஆரம்பமாகியது. தாக்குதல் தொடங்கும் முன் 4-வது உக்ரேனிய சேனைத் தளபதியின் பார்வையிடத்திற்கு செக்கோஸ்லொவாக்கிய கட்யூனிட்ஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் கிளிமென்ட் கோட்வல்ட், செக்கோஸ்லொவாக்கிய அரசாங்கத்தின் தலைவர் ஸ்தேனெக் ஃபீர்லிங்கர், தேசியப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லுட்விக் ஸ்வோபடா ஆகியோர் வந்தனர். சோவியத் மற்றும் செக்கோஸ்லொவாக்கிய போர்வீரர்கள் இவர்களை அன்போடு வரவேற்றனர். உருக்கனைய உறுதியான சோவியத் டாங்கிகளில் இரும்பைப்போன்று உறுதியான குடியரசின் இதயத்தை விடுவிப்பது என்பது செக்கோஸ்லொவாக்கியப் போர்வீரர்களுக்கு மாபெரும் கௌரவமாகும் என்று செக்கோஸ்லொவாக்கிய டாங்கிப் பிரிகேடின் கொமாண்டராகிய லெப்டினன்ட் கேர்னல் யான்கோவுடன் நடத்திய உரையாடலின் போது கிளிமென்ட் கோட்வெல்ட் குறிப்பிட்டார். சண்டைக்குப் புறப்பட்ட டாங்கிப் பிரிகேடு இராணுவ அதிகாரிகளுக்கு விடைகொடுத்து அனுப்புகையில் சேனைத் தளபதி ஜெனரல் யெரியோமின்கோவும் -அவர்கள் முதலாவதாக அஸ்த்ராவாவினுள் நுழைய வேண்டுமென வாழ்த்தி அனுப்பினார். கோட்வல்ட் மற்றும் சேனைத் தளபதியின் உரைகள் செக்கோஸ்லொவாக்கியப் போர் வீரர்களின் நெஞ்சை ஆழமாகத் தொட்டன. தாக்குதல் வெற்றிகரமானதாக அமைந்தது.

ஏப்ரல் 30 ஆம் திகதி 1-வது கார்டு படை மற்றும் 38-வது படையின் துருப்புகள் மொராவ்ஸ்க- அஸ்த்ராவா நகரையும் 18-வது படையின் துருப்புகள் மேற்கு கர்பாத்து மலைகளில் முக்கிய சாலை மையமாகிய ஷிலினாவையும் கைப்பற்றின.

மெராவ்ஸ்க- அஸ்த்ராவாவை விடுவித்ததானது, போர் நடவடிக்கையின் போக்கில் திருப்பு முனையாக அமைந்தது. நன்கு பலப்படுத்தப்பட்ட பிரதேசத்தை இழந்த பாசிஸ்டுகளால் இதற்குப்பின் இத்திசையில் போதுமான அளவு உறுதியான, நிலைத்த தற்காப்பை ஏற்படுத்த இயலவில்லை. மே 6 ஆம் திகதி 4-வது உக்ரேனிய சேனை ஷ்தோன்பெர்க் நகரைப் பிடித்து ஒலோமோவூத்ஸ் நகரின் நுழைவாயில்களை அடைந்தது. 2-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளும் தென் மேற்கிலிருந்து இந்நகரை நோக்கிச் சென்றன. சுற்றிவளைக்கப்படும் அபாயத்தின்கீழ் பாசிச ஜேர்மனியத் துருப்புகள் அவசர அவசரமாக மொராவ்ஸ்க-அஸ்த்ராவா தொழிற்துறை பிரதேசத்திலிருந்து பின்வாங்க ஆரம்பித்தன.



செக்கோஸ்லொவாக்கிய விடுதலைக்காய் வீழ்ந்த வீரர்களுக்கான நினைவாலயம்-1945(படம் 2011)

இந்நடவடிக்கையின் பயனாய் 4-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் மொராவ்ஸ்க-அஸ்த்ராவா தொழிற்துறை பிரதேசத்தைக் கைப்பற்றின. செக்கோஸ்லொவாக்கியாவின் மத்திய பகுதியிலும் மேற்கொண்டு முன்னேறிச் செல்வதற்கு அனுகூலமான சூழ்நிலைகள் ஏற்பட்டன.. பாசிஸ்ட்டு களின் தரப்பில் 1 இலட்சத்துக்கும் அதிகமான போர் வீரர்களும் இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டனர்.1 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் கூடுதலானோர் சிறைப் பிடிக்கப்பட்டனர். 4 ஆயிரம் சாதாரண பீரங்கிகள் 1570 மாரடர் பீரங்கிகள், 1087 டாங்கிகள், திடிர் தாக்குதல் பீரங்கிகள், 737 விமானங்கள் முதலியன அழிக்கப்பட்ட. அல்லது கைப்பற்றப்பட்டன.

பிராதிஸ்லாவா- பிரினோ நடவடிக்கை, 1945 ஆம் ஆண்டு மார்ச் 25 முதல் மே 5 வரை 2-வது உக்ரேனிய சேனையின் வலப்புறத் துருப்புகளால் நடத்தப்பட்டது. கிரோன், நீத்ரா, வாக் மொராவா ஆகிய ஆறுகள் மற்றும் மலைத் தொடர்கள் அடங்கிய அனுகூலமான இயற்கை எல்லைகளை ஆதாரமாகக் கொண்டு அமைந்த எதிரியின் பலத்த, முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட தற்காப்பை இத்துருப்புகள் பிளந்து செல்ல வேண்டியிருந்தது.

2-வது உக்ரேனிய சேனையின் 42 டிவிசன்களுக்கு எதிராக செக்கோஸ்லொவாக்கிய பரப்பில் தெற்குப் படைத்தொகுதியைச் சேர்ந்த 11 பாசிச ஜேர்மனிய டிவிசன்கள் நின்றன. சோவியத், ருமேனியத் துருப்புகள் எதிரியை ஆள் பலத்தில் 1.7 மடங்கும், சாதார்ண மற்றும் மார்டர் பீரங்கிகளில் 3.4 மடங்கும், டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகளில் 2 மடங்கும், விமானங்களில் 4.3 மடங்கும் விஞ்சி நின்றன.

எதிரியின் மீதான பிரதான தாக்குதல் கிரோன் ஆற்றின் எல்லையிலிருந்து பிராதிஸ்லாவா, மலாத்ஸ்கி, பிர்னோ திசையில் தொடுக்கப்பட்டது. 5-வது வான்படையும் பகுதியளவிற்கு துனாய் இராணுவ ப்ளீட்டும் சேனையின் முக்கியத் தாக்குதல் படைத் திரட்டின் நடவடிக்கைகளை ஆதரித்தன.



செக்கோஸ்லொவாக்கியா விடுதலை பெற்றபின் சுயாட்சி அமைக்கப்படுவதற்கான கட்சி நடவடிக்கையின் பொழுது

(தொடரும்)

# வடக்கில் வீதிகள் மட்டுமே போடப்படுகின்றன

# இதர பணிகளில் முன்னேற்றம் எதுவுமில்லை

## இந்திய போவர்ட் புளொக் கட்சியின் உறுப்பினர்கள் பி.பி.சிக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் வடபகுதி பாழடைந்து காட்சியளிக்கின்றது என்று அண்மையில் அங்கு விஜயம் செய்து திரும்பிய அகில இந்திய போவர்ட் புளொக் கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.**

இச்சந்திப்புக்கள் தொடர்பில் தமிழக சட்ட மன்ற உறுப்பினர் பி.வி. கதிரவன் பி.பி.சி தமிழோசைக்கு கருத்து தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் ஜே.பி.வி மற்றும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சித் தலைவர்களையும் தாங்கள் சந்தித்தோம்.

அவர்கள் அனைவரும் தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமைகளும் நலன்களும் கிடைக்க வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்துடன் இருக்கின்றார்கள் என்பதையும் உணர முடிகின்றது.

விடுதலைப்புலிகளுடனான இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் உட்பட பல பகுதிகளுக்கு தாங்கள் சென்று பார்வையிட்டதாகவும் அங்கு புதுக்குடியிருப்பு பகுதியில் புலிகளின் தலைவர் பிரபாகரன் வாழ்ந்த வீட்டுக்கு வெளியே இது தீவிரவாதியின் வீடு என்று ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் குறிப்பிட்டு பெயர்ப்பலகை வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பகுதியில் இன்னும் அரசின் முகாம்களில் வைக்கப்பட்டுள்ள மக்களை சந்திக்க தமது குழுவினருக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

வட இலங்கையில் சாலைகள் போடப்படும் பணிகள் விரைவாக நடைபெற்று வந்தாலும் இதர பணிகளில் முன்னேற்றம் ஏதும் ஏற்பட்டுள்ளதை தங்களால் காண முடியவில்லை எனவும் மக்கள் இன்றும் அச்ச சூழலிலேயே வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை நாங்கள் உணர்ந்தோம்.

இந்திய அரசு வழங்கும் நிதியுதவிகள் கூட தேவைப்படும் மக்களுக்கு முழுமையாக கிடைக்காத சூழல் வடக்கு இலங்கையில் நிலவுவது எமது குழுவினருக்கு தெரிய வந்தது.

அத்துடன் பல இடங்களில் மின்சார இணைப்புகள் இல்லாத சூழலையும் தங்களால் கவனிக்கக்கூடியதாக இருந்தது.

இலங்கையில் தாம் சந்தித்த மக்கள் தெரிவித்த பிரச்சினைகள் மற்றும் அவர்களின் தேவைகள் குறித்து இந்திய நாடாளுமன்றம் மற்றும் தமிழக சட்டமன்றத்தில் எடுத்துரைக்கப்படும் எனவும் அவர் தமிழோசையிடம் தெரிவித்தார்.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தருண் முகர்ஜி, தமிழக சட்டமன்ற உறுப்பினர் பி.வி. கதிரவன், தேசிய செயற்குழு உறுப்பினர் தேவராஜன் ஆகியோர் இலங்கைக்கு வருகை தந்து இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் உட்பட பலரை சந்தித்து தமிழ் மக்களின் நலன்கள் குறித்து உரையாடியமை தெரிந்ததே. (அ-2)

## குருமன்காடு விநாயகர் மஹோற்சவ பெருவிழா

(பூந்தோட்டம்)

வவுனியா குருமன்காடு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி சப்பறத்திருவிழாவும் 2 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 3 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (அ-9-266)



மயிலங்கூடலூர் பி.நடராசனின் ஈழத்தமிழர் தொன்மையும் வரலாறுகளும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரன் ஆய்வுரை நிகழ்த்துவதையும் திருமதி மகாயோகேஸ்வரி சிவஞானம் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை குழந்தை ம. சண்முகலிங்கம் பெற்றுக்கொள்வதையும் நூலாசிரியருக்கு பேராசிரியர் சிவலிங்கராஜா பொன்னாடை போர்த்துவதையும் படங்களில் காணலாம்.

## தமிழில் பதிலளித்தாராம் விஜித்த விஜயமுனி; வரலாற்றுப் பதிவு என்கிறார் அஸ்வர் எம்.பி

(கொழும்பு)

பிரதி சபாநாயகர் அவர்களே! இந்த சபையில் தமிழ் மொழியில் பதிலளித்த இந்தப்பிரதியமைச்சரின் பெயர் வரலாற்றில் இடம்பிடிக்கும் என்று ஆளும் கட்சியின் எம்.பியான ஏ.எச்.எம். அஸ்வர் புகழாரம் சூட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போது மாத்தறை மாவட்டத்தின் திக்வெல்ல கல்வி வலயத்திற்கு உட்பட்ட மா/மின்ஹாத் தேசிய பாடசாலையில் எழுதுநர், முகாமைத்துவ உதவியாளர், நிதி உதவியாளர், (தமிழ்) ஆகிய கல்வி சாரா பணியாட் தொகுதி பதவிகளுக்கு நீண்ட காலமாக நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் கல்வியமைச்சரிடம் மொஹமட் அஸ்லம் எம்.பி. கேள்விகளை எழுப்பியிருந்தார்.

கேள்வி நேரத்தின் போது மொஹமட் அஸ்லம் எம்.பி அவையில் பிரசன்னமாய் இருக்காமையினால் அந்தக் கேள்வியை இரண்டாவது சுற்றில் ஏ. எச்.எம்.அஸ்வர் கேட்டார்.

இதன்போது பதிலளிப்பதற்கு எழுந்த பிரதிக் கல்வி பிரதியமைச்சர் விஜித்த விஜிதமுனி சொய்சா இந்த கேள்விக்கான பதிலை சபைக்கு ஆற்றுப்படுத்துகின்றேன் என தமிழில் கூறினார்.

இதன்போது கருத்துரைத்த அஸ்வர் எம்.பி. கேள்விக்கு பிரதி கல்வி அமைச்சர் தமிழ் மொழியில் பதிலளித்துள்ளார். அவரின் பெயர் வரலாற்றில் இடம்பிடிக்கும் என்றார். (அ-2)

## ஐரோப்பிய நாடுகள் பல புலிகளின் செயற்பாடுகளை எதிர்த்துள்ளன

### இது பாரிய வெற்றி என்கிறது வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

பல ஐரோப்பிய நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பல நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதனை ஓர் பாரிய வெற்றியாகவே கருதப்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்குலக நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரசாரங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்த விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள ஆண்டறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகள் தமிழீழ விடுதலைப்புலிச் செயற்பாட்டாளர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)




யாழ் மண்ணில்....

கல்யாணமாலை

KALYANA MALAI

( சர்வதேச இலவச திருமண சேவை)



இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகின்றது

பதிவுக்கட்டணம் ரூ.1000/- மட்டுமே

அலுவலக நேரம்: வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்
காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை

குறிப்பு: பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம். திருமணத் தரகர்கள் பதிவு செய்ய முடியாது.


## சிறுவர் உழைப்பை எதிர்த்து விழிப்புணர்வு ஊர்வலம்

(பூந்தோட்டம்)

சிறுவர்களை தொழிலுக்கு நியமித்தல் மற்றும் உழைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வவுனியா மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

இதன்போது சிறுவர்களை தொழிலுக்கு நியமிக்காதே, சிறுவர்களின் உரிமையை மீறாதே என்ற கோஷங்களை எழுப்பியவாறும் சிறுவர் உரிமை தொடர்பிலான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை வழங்கியவாறும் ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் வீதியால் சென்றிருந்தனர்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திரவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், பொது மக்கள், பாடசாலை ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தின் முன்றலில் ஆரம்பமான ஊர்வலம் நகர மணிக்கூட்டு கோபுர சந்தி வரை சென்று முடிவடைந்தது.

(அ-9-266)

# எங்களை விமர்சிக்க ரணில் ஒன்றும் திறமான மனிதர் கிடையாது

## அவரது ஆட்சியிலும் குற்றச்செயல்கள் அதிகரித்திருந்தன என்கிறார் நிமால்



(கொழும்பு)

**கற்றுக்கொண்ட பாடங்கள், மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பிலான எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாதென சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா சபையில் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தின அமர்வின் போது பாராளுமன்ற நிலையியற் கட்டளை 23 (2) இன் கீழ் கேள்வியொன்றை எழுப்பிப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நாட்டில் குற்றச் செயல்கள்,பாலியல் வல்லுறவுகள், மனிதப் படுகொலைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்திருப்பதாக சுட்டிக்காட்டி அவற்றின் முறைப்பாடுகள் குறித்து புள்ளி விபரத்துடன் சபையில் முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அமைச்சர் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

2002 காலப் பகுதியிலும் அதற்கு முன்னரான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலப்பகுதியிலும் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், கடத்தல்கள், காணாமல் போதல்கள் உள்ளிட்ட குற்றச்செயல்களை எதிர்க்கட்சித் தலைவர் மறந்து விட்டார்.

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்கவின் ஆட்சிக் காலத்தில் மட்டும் 48 ஆயிரத்து 539 குற்றச் செயல்கள் பாதிவாகியுள்ளன. இவற்றில் 23 ஆயிரத்து 579 வழங்குகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு முடிவுக்கு வந்துள்ளன.

இந்த குற்றச்செயல்களில் ஆயிரத்து 188 பெண்கள் துஷ்பிரயோகமும் 5 ஆயிரத்து 547 கொள்ளைகளும் 14 ஆயிரத்து 495 வீடுகள் உடைத்து கொள்ளைச் சம்பவங்களும் ஆயிரத்து 304 மனிதப் படுகொலைகளும் 786 கடத்தல்களும் இடம்பெற்றன.

இருந்தபோதிலும் தற்போது நாட்டில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்கள் தொடர்பில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கைது செய்யப்படுகின்ற குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கூறுவதுபோல் உரிய விசாரணைகள் இடம்பெறாமல் இல்லை. அவ்வாறு கூறுகின்ற எதிர்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றேன்.

மேலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரால் எழுப்பப்பட்ட கேள்விகளானது ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பியான அனுர குமார திஸா நாயக்கவினால் எழுப்பப்பட்டிருந்த கேள்விகளுடன் ஒப்பானவையாகும்.

இம் மாதம் 5 ஆம் திகதி இந்த சபையில் அனுர குமார எம்.பியினால் கேட்கப்பட்ட இதே கேள்விக்கு அரசாங்கத்தின் சார்பில் தெளிவான பதில் வழங்கப்பட்டுள்ளது. எனவே, நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்கு பதிலளிக்க முடியாது என்றார். (அ-2)

# நடிகைகளுக்கு பணத்தை கொட்டும் அரசு விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க முடியாதா?

## அத்தநாயக்க எம்.பி.கேள்வி

(கொழும்பு)

இந்திய நடிகர், நடிகைகளுக்கு வழங்கப்படும் கவனிப்பை இலங்கை விவசாயிகளுக்கு தற்போதைய அரசாங்கம் வழங்க மறுத்துள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கார்ல்டன் றகர் போட்டிக்கு இந்திய நடிகர், நடிகர்களை வரவழைத்து அவர்களுக்கு கோடிக் கணக்கில் நிதி செலவிடும் அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு ஏன் நிவாரணம் வழங்க முடியாது 'என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

350 ரூபாவுக்கு உரம் வழங்கியதால் விவசாயிகளின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்பட்டுள்ளதென அரசாங்கம் நினைக்கக்கூடாதென அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நெல் உற்பத்தி செய்யும் பல பகுதிகளிலும் உற்பத்தி தடைப்பட்டுள்ளதாகவும் போதியளவு நீர் இல்லாமை இதற்கு காரணம் எனவும் சுட்டிக்காட்டியுள்ள திஸ்ஸ அந்தநாயக்க, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (அ-2)

# பெருந்தோட்ட மக்களை தூண்டும் முயற்சியில் கூட்டமைப்பு

## திவயின குற்றச்சாட்டு

(கொழும்பு)

பெருந்தோட்ட தமிழ் மக்களை தூண்டக் கூடிய வகையில் தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் முயற்சி மேற்கொண்டு வருவதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

பெருந்தோட்ட மக்களின் விவகாரங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலையீடு செய்யக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெருந்தோட்ட மக்களுக்கும் சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம் என குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். இது தொடர்பான தகவல்களை அரச புலனாய்வுப் பிரிவினர் திரட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# சுனாமி ஒத்திகை

(முல்லைத்தீவு)

தேசிய ரீதியில் நடைபெறும் சுனாமி ஒத்திகை நிகழ்வு முல்லைத்தீவிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.இதற்கமைய இந்நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு கரையோர கிராம மக்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து ஒத்துழைப்பு வழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் றீட் நித்தியானந்தன் குலாஸ் கேட்டுள்ளார். (அ-3-267)

# வடக்கில் இராணுவ ஆட்சியைக்காட்டும் தெல்லிப்பழை தாக்குதல் சம்பவம்

## அரியம் எம்.பி.சுட்டிக்காட்டு

ஜனநாயக வழிமுறையில் அமைதியான முறையில் தங்களது வாழ்வுரிமையை வலியுறுத்த பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை கழிவு ஒயிலை ஊற்றி காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்கப்பட்டதனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ். தெல்லிப்பழையில் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

வலிகாமம் வடக்கு மக்களின் காணிகள் படையினரால் அபகரிப்பு செய்யப்படுவதை எதிர்த்து யாழ். தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் காலை மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு அரச புலனாய்வாளர்கள் கழிவு ஒயிலை ஊற்றிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்படுவதாக அரசு கூறுகின்றது. ஆனால், மக்கள் தங்களது வாழ்வுரிமையை வலியுறுத்தி ஜனநாயக ரீதியான போராட்டங்களைக்கூட நடத்த முடியாமல் உள்ளனர்.

எனவே, வடக்கில் இராணுவ ஆட்சி நடைபெறுவதை உறுதிசெய்வதற்கு இதைவிட வேறென்ன சான்றுகள் தேவை என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)




கிளிநொச்சி அம்பாள்குளம் பொதுச்சந்தையின் அவலநிலை...

# ஜோர்ஜ் புஷ், டொனி பிளேயர் போர்க்குற்றவாளிகள்!

## மலேசிய போர்க்குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பு

ஈராக் மீதான படையெடுப்பு, போர் அனர்த்தங்கள், அழிவுகள், பல்லாயிரக்கணக்கானோரின் உயிரிழப்பு ஆகியவை தொடர்பான போர்க்குற்ற வழக்கில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ். டபிள்யூ. புஷ், முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் டொனிபிளேயர் ஆகியோர் போர்க்குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் புஷ் நிர்வாகத்திலிருந்து மற்றும் 7 பேரும் போர்க்குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர். மலேசிய



தலைநகரான கோலாலம்பூரில் இயங்கும் போர்க்குற்றவியல் விசாரணை நீதிமன்றம் இவர்களைப் போர்க்குற்றவாளிகளென இனங்கண்டு தீர்ப்பளித்துள்ளது.

இவ்வருடமே இரண்டாம் வாரத்தில் இந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. 7 உறுப்பினர்களைக் கொண்ட இந்த போர்க்குற்றவியல் விசாரணை நீதிமன்றம் 2007 ஆம் ஆண்டு அப்போதைய மலேசியப் பிரதமர் மஹாதிர் மொஹமதால் நிறுவப்பட்டது.

ஈராக் போரின்போது இடம்பெற்ற சித்திரவதைகள், படுகொலைகள் துஷ்பிரயோகங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை சம்பந்தமான நேரடி சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

நேரில் கண்ட சாட்சியங்களின் வாக்குமூலங்களும் ஐந்து நாட்கள் வரை பதிவு செய்யப்பட்டன. விசாரணை முடிவில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ். டபிள்யூ.புஷ் அவரது துணை ஜனாதிபதி டிக் சென்னி, பாதுகாப்பு அமைச்சர் டொ னால்ட் ரம்ஸ்பெட் ஆகியோரும் ஐந்து சிரேஷ்ட அதிகாரிகளும் போர்க்குற்ற வாளிகள் என கோலாலம்பூர் போர்க்குற்ற வியல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது. பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் றொனி பிளேயரும் போர்க்குற்றவாளி யென இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணை ஆவணங்கள் அனைத்தும் ஹேக்கில் இயங்கும் சர்வதேச குற்றவியல் விசாரணை நீதிமன்றத்துக்கும் ஐ.நா. பாதுகாப்பு சபைக்கும் அனுப்பி வைக்கப்படும் எனஇந்த நீதிமன்ற வட்டாரம் தெரிவித்தது.

இந்த நீதிமன்றத்திற்கு, தண்டனை விதிக்கும் அதிகாரம் கிடையாது. இது நூரம்பேர்க் குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தை முன்மாதிரியாகக் கொண்டு நிறுவப்பட்டதாகும்.

கோலாலம்பூர் போர்க்குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தில், ஈராக் மீதான அமெரிக்காவின் படையெடுப்பு சம்பந்தமான விசாரணை நீதியரசர் டான் ஸ்ரீலமின் மொஹமத் யூனுஸ் தலைமையில் நடைபெற்றது.

அவர் தீர்ப்பை வாசிக்கும்போது "ஈராக்கில் இடம்பெற்ற சித்திரவதைக் குற்றங்களுக்கு நூரம்பேர்க் சட்ட 6 ஆம் விதிக்கிணங்க 8 குற்றவாளிகளுமே கூட்டாகவோ தனிப்பட்ட ரீதியிலோ பொறுப்பாளராகுகின்றனர்" என்றார்.

"அமரிக்கா சர்வதேச சட்டத்திற்கு உடன்பட்டது. அதுபோல நூரம்பேர்க் சட்ட விதிகளுக்கும் கட்டுப்பட்டது. போர் உட்பட அசாதாரணமான சூழ்நிலையில் உறுதிப்பாடின்றியும் பகிரங்கமாகவும் அது சித்திரவதையை மேற்கொள்ளுமானால், அச்செயல் மன்னிக்கவும் அனுமதிக்கவும் முடியாத ஒரு செயலாகும்" என்றும் நீதியரசர் சுட்டிக் காட்டினார்.

"சாட்சியமளித்தோரில் அனேகர் சட்டவிதிகளுக்கு மாறாக தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோர் ஆவர். இவர்கள் அவ்வப்போது குரூர சித்திரவதைக்குட்படுத்தப்பட்டவர்கள். பலர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். தக்க காரணங்களின்றி தான்தோன்றித்தனமாக இவர்களைத் தடுத்து வைத்துக் கொடுமைப்படுத்தியோரும், அவர்களது அரசுகளும், பாதிக்கப்பட்ட இவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்று ஐந்து நீதிபதிகளைக் கொண்ட இந்த அமர்வு கோருகின்றது" என்றும் நீதியரசர் தீர்ப்பின்போது குறிப்பிட்டார்.

இந்தத் நீதிமன்றத்தால், இனங்காணப்பட்டுள்ள போர்க்குற்ற வாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள், போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் சட்ட விரோதக் குறுக்கீடுகள் ஆகியவை அடங்கிய ஆவணங்கள், போர்க் குற்றங்கள் மீதான ஆணைக்குழுவுடனும் சர்வதேச போர்க் குற்றவியல் விசாரணை நீதிமன்ற வழக்குத் தொடுநரிடமும் அதிவிரைவில் கையளிக்கப்படும் என்றும் நீதியரசர் ஸ்ரீலமின் மொஹமத் யூனுஸ் தெரிவித்துக்கொண்டார்.

மறைந்த முன்னாள் சிலியின் சர்வாதிகாரி அகுஸ்டோ பினோசெட், பிரிட்டனில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அதேவேளை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிக்கும் அவரது பரிவாரங்களுக்கும் எதிரான போர்க்குற்றச் சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை அமெரிக்காவின் அழுத்தத்தால் கனடா, ஸ்பெயின், ஜேர்மன் ஆகிய நாடுகளின் அரசுகள் கைவிட்டுவிட்டன. இது ஒரு பாரபட்சமான செயல். நீதித் துறையில் இக்களங்கம் துடைத்தெறியப்படவேண்டியதொன்றே என்றும் பேராசிரியர் குர்தியால் குறிப்பிட்டார்.

7உறுப்பினர்களைக்கொண்ட கோலாலம்பூர் போர்க்குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தை 2007 ஆம் ஆண்டு அப்போதைய மலேசியப் பிரதமர் மஹாதிர் மொஹமத்தே நிறுவினார். வயது முதிர்ந்த நிலையிலும் அவர் தற்போதைய விசாரணையிலும் கலந்து கொண்டார்.

சாட்சியமளித்தவர்களில் அப்பாஸ் அப்ரியும் ஒருவர். இவர் ஒரு பொறியியலாளர். ஈராக் பளுஜா நகரைச்சேர்ந்தவர். தடுப்புக்காவலில் இவர்மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது அவரது விரல் நகங்கள் பிடுங்கப்பட்டுள்ளன. அலிஷலால் என்பவர் நிர்வாண மாக்கப்பட்டு அவரது உடலில் மின்சாரக் கம்பிகளால் அதிர்ச்சியூட்டப்பட்டுள்ளது. மாசிம் பெக் என்பவர் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு சித்திரவதைக்குட் படுத்தப்பாட்டார்.

இவர்களால் அளிக்கப்பட்ட சாட்சியங்களையும், முன்னாள் மலேசியப் பிரதமர் மஹாதிர் வெகு உன்னிப்பாக அவதானித்தார். நீதிமன்ற விசாரணை முடிவில் தாம் வெளியேறும்போது, "புஷ்ஷும் அவரது பரிவாரங்களும் பயங்கர கொலைஞர்கள், வகைதொகையின்றி, மக்களைக் கொன்று குவித்துள்ளார்கள். இன்று பெரும் சக்தி படைத்த நாடுகள்கூட, இத்தகைய கொலைஞர்களை விட்டு வைக்கின்றன. இது மனித குலத்தை ஒரு வஞ்சிக்கும் நடவடிக்கையாகும்" என்றார்.

2003 ஆம் ஆண்டு ஈராக்மீது அமெரிக்கா படையெடுத்தது. இது கூட்டுப்படையெடுப்பு. இதனால் ஈராக்கில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் மீதான வழக்கு, கோலாலம்பூர் போர்க் குற்றவியல் விசாரணை நீதி மன்றத்தில், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகள் தரப்புக்காக, நீதிமன்றத்தால் ஒரு சட்டத்தரணி நியமிக்கப்பட்டார்.

எதிரிகள் இன்றியே, அவர்களுக்காக வாதாடுவதற்கான அதிகாரம் இச்சட்டத்தரணிக்கு அளிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பும் அளிக்கப்பட்டது. போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டோருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. உங்களுக்காக நீங்கள் சட்டத்தரணி நியமித்துக் கொள்ளலாம். இல்லை யேல் பிரதிநிதிகளை அனுப்பி வைக்கலாம் என இவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இச்சம யத்தில் இந்த நீதிமன்ற நிறுவுநரான, முன்னாள் மலேசியப் பிரதமர் மஹாதிர் முன்னறிவித்தல் ஒன்றை விடுத்தார்.

குற்றவாளிகளின் முகமூடி கிழிப்பு, ஏனைய தலைவர்களுக்கும் ஒரு படிப்பினையாக இருக்கும். வரலாற்றில், குற்றவாளிகள் என்ற முத்திரை பொறிப்புடன் சங்கமிக்க விரும்பமாட்டார்கள். அஞ்சுவார்கள். போர்க் குற்றவாளிகள் எனத் தீர்க்கப்படுவோர், வரலாற்று நூல்களில் போர்க் குற்றவாளிகள் என்றே சுட்டிக்காட்டப் படுவர்.

கோலாலம்பூர் நீதிமன்ற விசாரணை முன்னெடுப்புகள் நேர்மையானவையாக இருக்கும். சதாம் ஹுஸைனுக்குத் தூக்குத் தண்டனை விதித்த கங்காரு நீதிமன்றத்தைப் போல் இந்த நீதிமன்றம் இயங்காது என்று மஹாதிர் குறிப்பிட்டிருந்தார்.

இவர் 2007 ஆம் ஆண்டு ஏழு உறுப்பினர்களைக் கொண்ட கோலாலம்பூர் போர்க் குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தை நிறுவினார். எனினும் 2003 ஆம் ஆண்டே இதன் அவசியத்தை இவர் வலியுறுத்தியுள்ளார். அவ்வாண்டு, மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் அணிசேரா நாடுகளின் உச்சிமாநாடு நடை பெற்றது.

இந்த உச்சி மாநாட்டில் அப்போதைய பிரதமரான மஹாதிர் உரையாற்றுகையில், "போர், சட்டபூர்வமாக நிராகரிக்கப்பட வேண்டியதொன்று; ஒரு நாட்டை சீரழிக்கும் கலவரங்களை அடக்க நேரிட்டால், அந்நிய படைகளின் திடீர் பிரவேசம் முறையற்றது. அந்நாட்டில் ஐ.நா.வின் கட்டுப்பாட்டின் கீழ் பல்தேசியப்படைகளே நிலை கொள்ளவேண்டும். ஒரு தனிநாடு உலக பொலிஸ்காரனாக செயற்பட அனுமதிக்கப்படமாட்டாது. இந்த நிலைப் பாட்டில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை என்ன? எப்போது எடுக்கப்பட வேண்டும்? என்பவற்றைக் குறைந்த பட்சம் அனைத்து தரப்புகளுமே கூடி தீர்மானிக்க வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்தார்.

2003 ஆம் ஆண்டு வருடத்திய இவரது கனவு 2007 ஆம் ஆண்டு நனவாகியது. இவரால் நிறுவப்பட்ட கோலாலம்பூர் போர்க் குற்றவியல் நீதி மன்றம், கடந்த வருட(2011) நவம்பரில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ், அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் ஆகிய இருவரையும் போர்க் குற்றவாளிகள் என இனங்கண்டது. ஈராக் மீது இவர்கள் மேற்கொண்ட கூட்டுப் படையெடுப்பே அனர்த்தங்களுக்கும் பேரழிவுகளுக்கும் காரணமாயிற்று என்றும் இது சுட்டிக் காட்டியது.

அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை முகவர் நிறுவனத்தின் முன்னாள் அதிகாரியொருவர், பி.பி.சிக்கு சமீபத்தில் பேட்டியளித்துள்ளார். அதில் அவர், "தடுப்புக்கைதிகள் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட சம்பவங்கள், நாடாக்களில் பதிவு செய்யப்பட்டிருந்தன; அவற்றை முற்றும் முழுதுமாக அழித்துவிடுமாறு நானே உத்தரவிட்டிருந்தேன்" எனக்குறிப்பிட்டுள்ளார். இவரது பெயர் ஜோர்ஜ் றொட்ரிகஸ் ஆகும். இவர் அமெரிக்கப் புலனாய்வுத் துறையின் தேசிய இரகசிய சேவைப் பிரிவின் பணிப்பாளராக இருந்தவர்.

ஒபாமா நிர்வாகம் தீவிரவாதிகளின் இலக்குகள் மீது, ஆளில்லா விமானத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது. இந்தத் தீவிரவாதிகள் எளிதில் பிடிக்கமுடியாதவர்கள். அல்லது விசாரணைக்குட்படுத்த முடியாதவர்கள்.

இந்தத் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியங்களில் பதுங்கியிருக்கிறார்கள். இந்த எல்லைப் பகுதிகள் அடுக்கு மலைகளையும், அடர்ந்த வனாந் திரங்களையும்கொண்டவை. ஆங்காங்கு மலை வாழ் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகி றார்கள். அந்த அப்பாவி மக்களுடன் இந்தத் தீவிரவாதி களும் இரண்டறக்கலந்திருக் கிறார்கள்.

அம்மக்கள் மத்தியில் பரவியிருக்கிறார்கள். அதனால், ஆளில்லாத விமானத் தாக்கு தல்களால் தீவிர வாதிகள் மாத்திரமல்ல, பழங்குடியின் அப்பாவிகள், பெண்கள், பிள்ளைகள் ஆகியோரும் மடிந்து வருகிறார்கள்.

வட அத்திலாந்திக் உடன்படிக்கை நிறுவனத்தின் (நேட்டோ) குண்டுத் தாக்குதல் சம்பந்தமான அறிக்கையொன்றை சமீபத்தில் மனித உரிமைகள் மையமொன்று வெளியிட்டிருந்தது. அதில் லிபியா மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்களில், உயிர் நீத்த அப்பாவிகள் குறித்த விவரங்கள் அடங்கியிருந்தன. இவை வெளிவராத விடயங்கள். மூடுமந்திரமாகப் புதைக்கப்பட்டவை இவற்றை இந்த மையம் பகிரங்கப்படுத்தியிருந்தது.

பொதுமக்களைப் பாதுகாக்கும் பொருட்டு லிபியாவில் விமானப் பறப்புத் தடை மண்டலம் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனை ஐ.நா. பாதுகாப்புச் சபையும் அங்கீகரித்திருந்தது. எனினும் இந்த மண்டலத்தில் நேட்டோ படைகள் எட்டுத் தடவைகள் விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இவற்றில் 72 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களில் 20 பெண்கள், 24 பிள்ளைகள் ஆகியோரும் அடங்குவர். அநேகர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்க, பிரிட்டிஷ், பிரான்ஸ் விமானங்களே இந்த நேட்டோ தாக்குதல்களை நடத்தியுள்ளன. ஈராக், அப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா மேற்கொண்ட படையெடுப்புகளால், பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் மடிந்துள்ளார்கள். அகதிகள் பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்துள்ளது.

முன்னாள் ஐ.நா. உதவிச் செயலாளர் நாயகம் டெனிஸ் ஹலிடேயும் கோலாலம்பூர் போர்க்குற்ற விசாரணையின் போது சமுகமளித்திருந்தார். இதில் அவர் கருத்து வெளியிடுகையில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தைச் சாடினார்.


"ஆப்கானிஸ்தான் மீதும் ஈராக்கின் மீதும் தான், படையெடுப்பதற்கு முன்னரே அமெரிக்கா, சர்வதேச அமைப்புகளை பலவீனப்படுத்திவிட்டது. புஷ் நிர்வாகத்தின் போது ஐ.நா. பெரிதும் பலவீனப்பட்டிருந்தது. ஐ.நா.பாதுகாப்புச் சபையையும் இந்த நாடுகள், அவற்றின் சுயநலன்களுக்காகவே பயன்படுத்துகின்றன. நிச்சயமாக அது ஒரு நேர்மையற்ற அமைப் பாகிவிட்டது" என ஹலிடே சுட்டிக்காட்டினார்.

நன்றி: இணையம்

# வரணிப் பற்றுள்ள இராமச்சந்திரனும் சுட்டிபுரம் அம்பாள் தேர் உற்சவமும்

வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் 2012 தேர் உற்சவ விழா வரலாற்று சாதனை என்றே சொல்லலாம். 16.06. 2012 வரணி விழாக் கோலம் கொண்டிருந்தது. சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் அடியார்கள் அலையலையாக வந்து அடியார்கள் சமுத்திரமே காணப்பட்டது.1978 ஆம் ஆண்டு இதே காலத்தில் சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் பத்தாம் திருவிழா உற்சவத்தில் காலம்சென்ற தென்னிந்திய பாடகர் சீர்காழி கோவிந்தராஜனின் நிகழ்ச்சியில் திரண்ட சன சமுத்திரத்திற்குப் பின்பு இவ்வருடம்தான் இப்படியான ஒரு அடியார்கள் கூட்டத்தை என்னால் காண முடிந்தது.

அன்று காலை 9.00 மணியிலிருந்து பறவைக்காவடிகள், சிறுவர்களிலிருந்து பெரியோர்கள் வரையும் நான்கு புறங்களிலிருந்தும் அயற்கிராமங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான காவடிகளும் பெண்களால் பாற்குடங்களும் சுமந்து வரக்கண்டேன். ஆலயத்தின் உட்புறத்தில் பல்லாயிரக்கணக்கான அடியார்களும் திரண்டு நின்று சுட்டிபுரம் கண்ணகை அம்பாளுக்கு வணக்கம் செலுத்துவதையும் என்னால் பார்க்க முடிந்தது. கடந்த பல வருடங்களாக துயரத்திலும் துன்பத்திலும் ஆழ்ந்திருந்த மக்கள் குறிப்பாகச் சொன்னால் தென்மராட்சி கிழக்கு மக்கள் கூட்டங்கூட்டமாக




வடமாகாண ஆளுநர் G.A. சந்திரசிறி, இந்து பௌத்த கலாசார பேரவையின் இணைப்புச் செயலாளர் M.T.S. ராமச்சந்திரனும் 52 Divisional கொமாண்டர் அனுர சுதசிங்கவும் காணப்படுகின்றனர்.

வாகனங்கள் மூலம் வந்து இறங்குவதையும் காணக் கூடியதாக இருந்தது. இவையெல்லாம் ஒருபுறமிருக்க காலை 10.00 மணியளவில் இந்துசமய கலாசாரப் பேரவையின் செயலாளர் வரணி மண்ணில் பிறந்தவரும் வரணிப்பற்றுடன் எப்பொழுதும் வாழ்பவரும் சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலய வாசலில் மாண்பு மிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் வழங்கப்பட்ட வாகனத்தில் இந்து சமய கலாசார கொடி பூட்டியதுடன் வந்து இறங்கியதையும் பாதுகாப்பு



படையினர் அவரை வரவேற்பதையும் வரணிமக்கள் கண்ணகை அம்பாளின் மெய்யடியார்கள் அனைவரது முகத்திலும் அவர்களது கண்களிலும் அவரின் வருகையின் சந்தோசம் தெரிந்தது. அதுமட்டுமல்ல அவருக்குப்பின்னால் தென்மராட்சியில் உள்ள இராணுவத் தளபதிகள் வாகனங்களில் வந்து இறங்கியதையும் அவர்களின் படையணிகள் அவரைச்சுற்றி நிற்பதையும்



காணமுடிந்தது. அடுத்து சில நிமிடங்களில் வடமாகாணத்தின் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சத்தியசீலனும், யாழ்.மாவட்ட கலாசார பணிப்பாளர் திருமதி சிறீதேவி அம்மையாரும் ஒன்றன்பின் ஒன்றாக வந்தார்கள். அதனைத் தொடர்ந்து வடமாகாண ஆளுநர் உயர் திரு G.A. சந்திரசிறியும் அவரின் செயலாளர் திரு இளங்கோவனும்,வருகைதந்த பொழுது இந்து கலாசார பேரவையின் செயலாளரும் ஜனாதிபதியின் கௌரவ இராஜதந்திர ஆலோசகரும் , ஐரோப்பிய நாட்டின் பிரபல சட்ட ஆலோசகரும், வரணி மக்களால் நன்கு நேசிக்கப்படும் திரு M.T.S இராமச்சந்திரன் அவர்கள் முன்னின்று வரவேற்று சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் தேரில் ஏறுவதற்காக உள் வீதியில் வலம் வந்து வெளியே வரும் காட்சியும், ஆயிரக்கணக்கான கர்ப்பூரச் சட்டிகளை பெண்கள் சுமந்துவரும் காட்சியும் எதிர்ப்புறத்தில் வடமாகாண ஆளுநரும், வல்லமைமிக்க ஜனாதிபதியின் அன்பு ஆலோசகர் ராமச்சந்திரனும், அவர்களுக்குப்பின்னால் திரு இளங்கோவன் , திரு சத்தியசீலன், திருமதி சிறீதேவி, இராணுவத்தளபதி அனைவரும் அம்பாளின் தேர் பவனிவருவதை வரவேற்பது போல் நின்றமை கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.


பகல் 10.30 மணியளவில் எந்தக் காட்சியை எப்படிப் பார்ப்பது என்று மக்கள் அங்கும் இங்கும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ஆகாயத்தில் உலங்கு வானூர்தி வட்டமிடுவதைப்பார்த்தோம். எங்கள் எல்லோருடைய



மனதிலும் உலங்குவானூர்தியைக் கண்டதும் இயல்பாகவே கடந்தகால எண்ணங்கள் தோன்றும். ஆனால், அன்று தேர் உற்சவ நேரத்தில் உலங்குவானூர்தி வட்டமிடும்போது எல்லோருடைய மனதும் அம்பாளை வணங்கிய படியும் உலங்குவானூர்தியை பார்த்தபடியும் புன்சிரிப்புடன் நின்றார்கள். அப்பொழுது தேர் உற்சவத்தின் உச்சக்கட்டம். சுவாமி தேரிலே எழுந்தருளியது அந்தக் கண்கொள்ளாக் காட்சியுடன் உலங்குவானூர்தியி லிருந்து பூக்கள் சொரிந்தன. ஆலயத்தொண்டர்கள், மெய்யடியார்கள் மெய்சிலிர்த்து நின்ற காட்சியை நாங்கள் பார்த்தோம்.

அப்பொழுது உலங்குவானூர்தி பல தடவை வட்டமிட்டு பறந்து சித்திரத்தேரின்மேலும், மெய்யடியார்கள் மேலும் பூ மழை பொழிந்தார்கள். இத்தனை காட்சிகளுக்கும் மத்தியில் வடமாகாணத்தின் ஆளுநர் திரு G.A சந்திரசிறியும் ஜனாதிபதியின் கௌரவ ஆலோசகர் திரு M.T.S ராமச்சந்திரன் அவர்களும், தேர் வடத்தில் பிடித்து மெய்யடியார்களுடன் இணைந்து தேர் இழுக்கும் காட்சியையும் நான் பார்த்தேன். இந்தக் காட்சியும் நிகழ்வும் தென்மராட்சி மக்களைப் பொறுத்தவரையில் பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள் என்றால் மிகையாகாது.

இத்தனை காட்சிகளையும் நான் வரிசைப்படுத்தி சொல்லுவதற்கெல்லாம் சாதாரண தொண்டர் என்ற வகையில் என்னைப்போல மற்றவர்களும் இந்த நிகழ்வை அனுபவித்திருப்பார்கள் என்று நினைக்கின்றேன். நான் அந்த தேர்த் திருவிழாவிலே பலருடைய வாய்க்குள் முணுமுணுப்பதைப் பார்த்திருக்கின்றேன். இந்த நிகழ்வுக்கெல்லாம் இப்படியான ஏற்பாடுகளுக்கெல்லாம் வரணியின் மைந்தன் ஜனாதிபதியின் ஆலோசகர் ஐரோப்பாவின் சட்டஆலோசகர் திரு M.T.S ராமச்சந்திரன் அவர்களால்தான் இப்படி ஒன்றைச் செய்ய முடியும் என்று பேசிக் கொண்டதை என்னால் கேட்க முடிந்தது. அவரது தாய்ப்பற்று, வரணி ஊர்ப்பற்று, தமிழ்ப்பற்று, இலங்கை தேசத்தின் மீது அவருக்குள்ள பற்று இவையெல்லாம் பார்த்துத்தான் மாண்புமிகு ஜனாதிபதி கௌரவ மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஐரோப்பாவில் வாழ்ந்து கொண்டிருந்த அவரை அழைத்து அதியுயர் பதவிகளை வழங்கியிருக்கிறார் என்று வரணி மக்கள் பெருமிதத்துடன் பேசிக் கொண்டனர். ஆலய திருப்பணிச்சபை ஆலயத்தை சேர்ந்த




சுட்டிபுரம் தேர் உற்சவத்தின் போது வடமாகாண ஆளுநர் G.A. சந்திரசிறியும் இந்து பௌத்த கலாசார பேரவையின் இணைப்புச் செயலாளர் M.T.S ராமச்சந்திரன் , ஆளுநரின் செயலாளர் இளங்கோவனும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் , யாழ்.மாவட்ட கலாசார பணிப்பாளர் சிறீதேவியும் படத்தில் காணப்படுகின்றனர்.

மெய்யடியார்கள் பன்னிரண்டு திருவிழா உபயகாரர்கள், ஆலயத்தின் பிரதமகுரு, உதவிக் குருமார்கள் அனைவரும் வரணிப் பற்றுள்ள ராமச்சந்திரனை அங்கிருந்த மெய்யடியூர்கள் கூட்டத்தின் மத்தியில் ஒலிபெருக்கிகள் ஊடாக அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதை நான் காதால் கேட்டேன். தேர் உற்சவத்தில் அவரைத் தெரியாதவர்கள் கூட அவரின் வடஇலங்கையின் சமூக சேவைகள் பற்றியும்,கலாசார நடவடிக்கைகள் பற்றியும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதை என்னால் கேட்க கூடியதாய் இருந்தது. வரணி மக்கள் எல்லோரினதும் விருப்பத்திற்குரியவர் சுட்டிபுரம் கண்ணகை அம்பாளின் முழுமையான கடாட்சத்தை பெற்றவர் என்ற வகையிலும் அவரும் அவரது குடும்பத்தினரும் உடல் நலத்துடன் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று தேசப்பற்றுள்ள, வரணிப் பற்றுள்ள அனைவரும் வாழ்த்தினர். இதேபோல வரலாற்று சிறப்புமிக்க சுட்டிபுரம் கண்ணகை அம்பாளின் ஒவ்வொரு வருட உற்சவங்களும் சிறப்புற அமைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

**ஆக்கம்**
**கமலாதேவி (சுவிசர்லாந்)**


வி.இல.(சி-297)


# சிறுவர் அரங்கம்

137

## கன்றுகளை மாற்றினான்



ஓர் ஊரில் முத்து என்பவன் இருந்தான். அவனுக்குச் சொந்தமாக நிறைய மாடுகள் இருந்தன.

பக்கத்து வீட்டில் மாணிக்கம் என்பவன் இருந்தான். அவனிடம் ஐந்து மாடுகளே இருந்தன.

முத்து அடிக்கடி வெளியூர் செல்வான். அவன் மாடுகளை எல்லாம் மாணிக்கமே பார்த்துக் கொள்வான்.

மாணிக்கத்திடம் வந்த முத்து, நான் வெளியூர் செல்கிறேன். திரும்பி வரப் பல நாட்கள் ஆகும். என் மாடுகளை நீ தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றான்.

கவலைப்படாமல் போய் வா நான் பார்த்துக் கொள்கிறேன் என்றான் மாணிக்கம்.

முத்துவும் புறப்பட்டுச் சென்றான்.

ஏமாற்றுக்காரனான மாணிக்கம் வாய்ப்பைப் பயன்படுத்த நினைத்தான். முத்துவின் மந்தையில் இருந்து மூன்று கடாரிக் கன்றுகளைப் பிரித்தான். அவற்றைத் தன் மாடுகளுடன் சேர்த்தான்.

தன் காளைக் கன்றுகள் மூன்றை முத்துவின் மந்தையில் சேர்த்தான்.

சில நாட்கள் சென்று முத்து ஊர் திரும்பினான். கன்றுக் குட்டிகள் மாற்றப்பட்டதை அவன் அறியவில்லை.

## மரியாதைராமன் கதைகள்

முத்துவின் மாடுகளைத் திடீரென நோய் தாக்கியது. எல்லா மாடுகளும் இறந்து விட்டன.

இதனால் உள்ளம் உடைந்தான் அவன். அந்த ஊரை விட்டு எங்கோ சென்று விட்டான்.

ஆண்டுகள் சில சென்றன. மாணிக்கத்தின் மாடுகளின் எண்ணி க்கை அதிகம் ஆயிற்று. அவன் மாற் றிய கன்றுகளும் வளர்ந்து பசுக்கள் ஆயின. அவை பால் தந்து கொண் டிருந்தன.

முத்து அந்த ஊருக்கு வந்தான். அவன் நிலையைக் கண்டு இரக்கப்எபட்டான் மாணிக்கம். தன் வீட்டிற்கு அவனை அழை த்துச் சென்றான்.

குடிப்பதற்குப் பால் வேண்டும் என்று கேட்டான் முத்து.

பால் கொண்டு வந்து கொடுத்தான் மாணிக்கம்.அந்தப் பாலைக் குடித்தான் முத்து. அதன் சுவை அவனுக்குப் பழக்கப்பட்ட தாக இருந்தது.தன் பசுவின் பால் என்பது அவ னுக்குப் புரிந்தது.

ஆ! இந்தப் பாலை நான் முன்னரே சுவைத்து உள்ளேன். என் நாக்கு என்னை ஏமாற்றாது. என் மாடு ஈன்ற கன்று தான் இந்த மாடாக உள்ளது. அதன் பால் தான் இது.

நீ என் கன்றுகளை மாற்றி இருக்கிறாய் என் மாடுகளைக் கொடு! என்று கத்தினான்.

திகைத்த மாணிக்கம் என்ன பேச்சு பேசுகிறாய்? மாடுகளை இழந்ததால் உனக்குப் பித்துப் பிடித்து விட்டதா? என் பசுவின் பாலைத்தான் உனக்குத் தந்தேன். என்றான்.

நீ என்னை ஏமாற்றி இருக்கிறாய். இந்தப் பால் என் மாட்டின் பால்தான். என் மாடுகளைக் கொடு என்று கூச்சல் போட்டான் முத்து.

அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அங்கே கூடி விட்டார்கள்.

மாடுகளை இழந்ததில் இவன் அறிவு குழம்பிவிட்டது. அதனால் இப்படிக் கத்துகிறான்! என்றான் மாணிக்கம்.

அங்கு வந்தவர்கள் கலைந்து சென்றார்கள்.

தன் பேச்சு எடுபடாது என்பதை உணர்ந்தான் முத்து.

நீதிமன்றிற்குச் சென்று நீதிபதி மரியாதை ராமனை வணங்கினான். நடந்ததை எல்லாம் சொன்னான்.

நீங்கள் நீதி வழங்க வேண்டும் என்று வேண்டினான்.

மாணிக்கத்தை நீதிமன்றத்திற்கு வரவழைத்தார் அவர். என்ன நடந்தது என்று விசாரித்தார்.

நீதிபதி அவர்களே! மாடுகளை இழந்த சோகத்தில் இவனுக்குப் பித்துப் பிடித்து விட்டது. எங்கோ சென்ற இவன் சில ஆண்டுகளுக்குப் பின் திரும்பினான்.

இவன் மீது இரக்கப்பட்டு என் வீட்டில் தங்க வைத்தேன். இவனுக்குப் பால் கொடுத்தேன். அதைக் குடித்தான் இந்த மாடு என் மாடு என்று பிதற்றத் தொடங்கினான்.

இங்குவந்து வழக்குத்தொடுத்துள்ளான்.

என் மாடு ஈன்ற கன்று தான் அந்தப் பசு. அதை நான் பல ஆண்டுகளாக வளர்த்து வருகிறேன் என்றான் மாணிக்கம்.

குறுக்கிட்ட முத்து என் பசுவின் பால் சுவை எனக்குத் தெரியாதா?அது என் பசுதான். கன்றாக இருக்கும் போதே இவன் திருடி இருக்கிறான் என்றான்.

என்ன செய்வது என்று சிந்தித்தார் நீதிபதி.

முத்துவையும் மாணிக்கத்தையும் பார்த்தார் நீதிபதி மரியாதைராமன்.

உங்கள் வழக்கு மிகவும் சிக்கலாக உள்ளது. தீர ஆராய்ந்தே தீர்ப்பு வழங்க வேண்டும். ஒரு மாதம் கழித்து வாருங்கள் என்றார்.

அவர்கள் இருவரும் அங்கிருந்து சென்றார்கள். ஏவலர்களை அழைத்தார் நீதிபதி.

அரண்மனைத் தோட்டத்தில் மூன்று பாத்திகளை அமையுங்கள்.

முதல் பாத்தியில் மாட்டு எரு போடுங்கள். இரண்டாம் பாத்தியில் ஆட்டு எரு போடுங்கள். மூன்றாம் பாத்தியில் குப்பை எரு போடுங்கள்.

மூன்று பாத்திகளிலும் கீரையை விதையுங்கள். ஒரு மாதத்திற்குள் கீரை நன்கு வளர்ந்து விடும். நான் சொல்லும் நாளன்று கீரையைப் பறியுங்கள். மூன்று பாத்திக் கீரையையும் தனித்தனியே கொண்டு வாருங்கள்.

குறிப்பிட்ட நாள் வந்தது. மூன்று பாத்திகளில் விளைந்த கீரைகளையும் ஏவலர்கள் கொண்டு வந்தார்கள்.

சமையற்காரனை அழைத்தார் நீதிபதி. இந்த மூன்று கீரைகளையும் ஒன்றாகச் சமைக்க வேண்டும். இதில் எருமைத் தயிர், பாலின் தயிர், ஆட்டின் தயிர் மூன்றையும் ஊற்ற வேண்டும். சுவையாகச் சமைக்க வேண்டும் என்றார்.அவனும் அப்படியே செய்தான்.



முத்துவையும் மாணிக்கத்தையும் தன் வீட்டிற்கு வரவழைத்தார் நீதிபதி. என்னுடன் சேர்ந்து உண்ணுங்கள் என்றார்.

சமையற்காரன் அவர்கள் மூவருக்கும் இலை போட்டான். அதில் சோறு வைத்தான்.

தளதளவென்று கீரையை ஊற்றினான். மூவரும் அந்த உணவை சுவைத்து உண்டார்கள்.

சாப்பாடு எப்படி இருந்தது? என்று கேட்டார் நீதிபதி.அருமையான சாப்பாடு. சுவையாக இருந்தது. நன்றாக உண்டேன் என்றான் மாணிக்கம்.

முத்தேனோ, ஆ! என்ன சுவை. மாட்டு எரு, ஆட்டு எரு, குப்பை எருவால் விளைந்த அருமையான கீரை. அதில் எருமைத் தயிர், பசுவின் தயிர், ஆட்டுத் தயிர் மூன்றும் கலந்து உள்ளது.

திறமையான சமையற்காரரின் கை வ ண்ணமும் சேர்ந்து உள்ளது. சுவைக்குக் கேட்கவா வேண்டும்? வயிறார உண்டேன் என்று மகிழ்ச்சியுடன் சொன்னான்.

ஆ! இவனுக்கு எப்படிப்பட்ட சுவை உணர்வு உள்ளது. எதையும் பார்க்காமல் உள்ளதை உள்ளபடி சொல்கிறானே என்று நினைத்தார் நீதிபதி.

மாடு தன்னுடையது என்று இவன் சொன்னான். அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். கன்றுக் குட்டிகளை மாணிக்கம் மாற்றி இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

மாணிக்கத்தைப் பார்த்து அவர் நீரும் கீரை உணவைச் சாப்பிட்டீர். இவரும் கீரை உணவைச் சாப்பிட்டார்.

இவர் சொன்னது போலவே இந்த உணவு சமைக்கப்பட்டுள்ளது. பாலைக் குடித்த இவர் சொன்னதும் உண்மையாகத்தான் இருக்கும்.

கன்றுக் குட்டிகளை நீர் மாற்றி இருக்கிறீர். உண்மையை ஒப்புக் கொண்டால் தண்டனையிலிருந்து தப்பலாம்.

உண்மையை வரவழைக்கும் வழி எனக்குத் தெரியும். பின்னர் கடுமையான தண்டனைக்கு உள்ளாவீர் என்று மிரட்டினார்.

உண்மை வெளிப்பட்டு விட்டதே என்று நடுங்கினான் மாணிக்கம்.

ஐயா! என்னை மன்னியுங்கள்! இவனின் மூன்று கடாரிக்கன்றுகளை என் மாடுகளுடன் சேர்த்தேன். அதற்குப் பதில் காளைக் கன்றுகள் மூன்றை அங்கே விட்டேன்.

இவனின் கன்றுகள் இப்பொழுது பசு மாடுகளாக உள்ளன! பால் தருகின்றன! என்றான். அந்த மூன்று மாடுகளையும் முத்து விடம் தந்து விடு! என்று தீர்ப்பு வழங்கி னார் அவர்.

இருவரும் அவரை வணங்கிவிட்டுப் புறப்பட்டார்கள். இவ்வாறு நீதிபதி மரியாதை ராமன் தன்னிடம் வந்த வழக்குகளை ஆராய் ந்தார். நல்ல தீர்ப்பு வழங்கினார். அவர் புகழ் எங்கும் பரவியது. எல்லோரும் அவரைப் போற்றி னார்கள்.

# ஈவினை மத்தி அருள்மிகு ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம்
## புனராவர்த்தன சப்த தச குண்டபக்ஷ அஷ்டபந்தன
## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபன சிறப்பு மலர் - 21.06.2012

### ஆலய குருவின் ஆசியுரை




1950 களில் நான் சிறுவனாக இருக்கும் போதே ஐயாவுடன் (து. தியாகராஜா ஐயர்) கோவிலுக்கு வருவேன். ஐயா இந்தக்கோவிலை நான்காவது பரம்பரையாகப் பார்த்து வந்தார். அன்றிலிருந்து இந்த ஆலயத்தின் ஒவ்வொரு வளர்ச்சிப் படிகளை வகுத்தும் பார்த்தும் வருகின்றேன். மிக அண்மைக்காலமாக எம்பெருமான் ஆலயம் பாரிய வளர்ச்சி அடைந்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

கஜலக்ஷ்மி, ஸ்ரீகனகதுர்க்கை, சண்டிகேஸ்வரர் போன்ற புதிய பரிவாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விநாயகரின் ராஜ மூர்த்தமான பஞ்சமுக விநாயகர் விக்கிரகம் வந்துள்ளது. அத்தோடு 350 கிலோ எடையுள்ள பெரிய வெண்கல கண்டாமணியுடன் கூடிய கோபுரம், யாக விமானம், ஆதிமூல திரிதளம், சபை விமானம், வசந்தமண்டபம் எனப் பல கட்டடங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தில் மாபிள் பதிக்கப்பட்டுள்ளது. வர்ணப் பூச்சு மிகச் சிறப்பாகவுள்ளது.

சோதிட ஆகம கிரியாஜோதி, சிவாகம ரத்னா, கலாநிதி,
தியாக கெங்காதரகுருக்கள், பரம்பரை ஆலயக்குருக்கள்,
ஈவினை கற்பக விநாயகர் தேவஸ்தானம்

### செயலாளரின் வாழ்த்துச் செய்தி




ஈவினை என்னும் கிராமத்திலே வானளாவ உயர்ந்து நிற்கும் கட்டடங்களையும் பசுமையான கண்ணிறைந்த காட்சிகளையும் இயற்கையான தல விருட்சங்களையும் தன்னகத்தே சுமந்து நிற்கும் அமைதியான சூழலிலே சிவபெருமானின் மூத்த திருக்குமாரரான தும்பிக்கையான் பதியமர்ந்து தனை பக்தியோடு வழிபடும் அடியவர்களை அருட்கண்களாலே நோக்கிய வண்ணம் அருளாட்சி புரியும் கற்பக விநாயகன் என்னும் நாமத்துடன் அடியவர்களின் வேண்டுதல்களை எல்லாம் நிறைவு செய்யும் நோக்குடன் ஈவினை வாழ் மக்களாலும் கற்பக விநாயகனின் பிரதம குருக்களின் ஒத்துழைப்புடனும் கற்பக விநாயகனின் ஆலயம் இவ்வளவு தூரம் வளர்ந்து நிற்கின்றது.

கடந்த காலங்களில் எம்மவர் தன் மூர்த்திகரத்தினால் தனை எவ்வாறு வளர்ச்சி பெற செய்தாரோ அதேபோன்று கிராமத்திற்கும் அடியவர்களுக்கும் வளர்ச்சிப் பாதையை ஏற்படுத்திய வண்ணம் உள்ளார். இதனை எமது கிராம மாணவர்களின் கல்வி சார் மற்றும் அடிப்படை கட்டுமான வசதிகளின் மூலம் கண்டு கொள்ளக்கூடியதாகவுள்ளது.

இதன் ஓர் கட்டமாக ஆலயம் தற்போது புனருத்தாரணத்துடன் கூடிய வரலாறு காணாத ஓர் வளர்ச்சியைப் பெற்று இன்று கும்பாபிஷேகம் காணுகின்றது. இந்நன்நாளில் கிராமமும் அடியவர்களும் அருளாசிகளை பெற கற்பகத்தான் தாழ்போற்றி வேண்டி நிற்கின்றேன்.

திரு. சு.சந்திரகுமார்
செயலாளர்,
ஈவினை மத்தி கற்பக விநாயகர் சைவ
பரிபாலனசபை



### ஆலய வரலாறு

ஆதிகாலத்தில் தற்போது ஆலயம் இருக்கும் இடத்தில் ஒரு குளம் இருந்தது. கிராமமக்கள் விவசாயிகளாக காணப்பட்டமையால் பல தேவைகளுக்காக அக்குளத்திற்குத் தினமும் வந்து சென்றனர். அவ்வேளை குளக்கட்டின் அருகில் இருந்த பயறி மரத்தின் கீழே மக்கள் சிறிய விநாயகர் சிலையை வைத்து வழிபட்டும் பின்னர் பொங்கல் செய்து மடைபரவி வழிபட்டு வந்துள்ளார்கள்.

அச்சிலை இன்னமும் மூலஸ்தானத்தில் மூலவருக்கு அருகில் உள்ளது. பின்பு தியாகராஜ ஐயர் ஊரவர்களின் உதவியுடன் சிறிய கற்கோயிலாக கட்டிமுடித்து 1928 இல் முதன்முதலில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

எமது ஆலயம் 1958, 1978 களில் கும்பாபிஷேகத்தை சந்தித்தது. இங்கிதமாக தியாகராஜ ஐயர் பரம்பரையினால் பராமரிக்கப்பட்டு வந்த ஆலயத்திற்கு 1987ஆம் ஆண்டு நிர்வாகசபை, தொண்டர்சபை என்பன ஆரம்பிக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. 1993 இல் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் பின் 1999 இல் புனருத்தாரணத்துடன் கூடிய மகா கும்பாபிஷேகமும் சிறப்புற நடாத்தப்பட்டது.

தொடர்ந்து 2005 இல் ஆலய குருக்கள் பிரம்மஸ்ரீ தியாககெங்காதரக்குருக்கள் அவர்களின் அரிய முயற்சியால் ஈவினை வாழ் அடியவர் திரு.சி.செல்வரத்தினம் (சொக்காமாமா) அவர்களின் உபயத்துடன் 2005ஆம் ஆண்டு இராஜகோபுர அடிக்கல்லுக்கரன குழி வெட்டப்பட்ட போது யானை வடிவத்தைக்கொண்ட ஓர் பாரிய கல்லை வெளிப்படுத்தி தனது புதுமையை நிரூபித்தார். 2012 இல் கஜலக்சுமி, ஸ்ரீகனகதுர்க்கை, சண்டிகேஸ்வரர் போன்ற புதிய பரிவாரங்களை உள்ளடக்கியும் ஏனைய பரிவாரங்கள் மறுசீரமைக்கப்பட்டும் யாகசாலை, வசந்த மண்டபம், பழைய மணிக்கோபுரம் என்பன புனர் நிர்மாணிக்கப்பட்டும் புதிதாக மணிக்கோபுரம் கட்டப்பட்டும் அடியவர்களின் உதவியுடன் தற்போதைய ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழும் அந்தண சிவாச்சாரியார்களின் ஆசியுடனும் இன்று குடமுழுக்கு காணுகின்றார் எம்பெருமான்.

**மலரமைப்பு :-**
**சி.ஞானேஸ்வரன்**
Allianz Insurance
Traing Agency Leader

### தலைவரின் வாழ்த்துச்செய்தி



பல தசாப்த வரலாற்றைக்கொண்ட எமது ஆலயத்தின் வரலாற்றுச் சான்றுகளை பகிரும் முகமாக இவ்வினிய கும்பாபிஷேக நன்நாளில் எம்பெருமான் துணை நிற்க, ஆலயத்தின் நிர்வாக சபையின் சார்பிலும் அடியவர்கள் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு மூலமூர்த்தியின் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றேன். இப்பாதையில் பயணிப்பதற்கு வழிகாட்டியாக விளங்கிய தியாகராஜா ஐயரும் தற்போது விளங்கிவரும் அவரின் வழித்தோன்றல்களின் சேவையும் அர்ப்பணிப்பும் இச்சமயத்தில் போற்றிப்பாராட்டத்தக்கது. இவ்வழித்தோன்றல்களிலே உருவான ஆலய குரு பிரம்மஸ்ரீ தியாககெங்காதரக்குருக்கள் அவர்களின் அளப்பரிய அர்ப்பணிக்கப்பட்ட சேவை வரவேற்கத்தக்கதொன்றாகும். அத்தோடு மட்டுமல்லாது கடந்த காலங்களில் சேவையாற்றிய நிர்வாக சபையினரும் இச்சமயத்தில் நினைவுகூறத்தக்கவர்களேயாவர்.

ஆரம்பத்திலே இந்து கலாசார திணைக்களத் தினூடாக நிதியைப் பெற் றுத்தந்த கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்க ளுக்கும் திருப்பணிகளைச் செய்த எமது கிராம மக்களுக்கும் எவ்வித சிரமமும் பாராது மிகுந்த ஊக்கத்துடன் உற்சாகம் அளித்து சகல வழிகளிலும் உதவிய நல் உள்ளங்களுக்கும் மண்ணில் வாழ்வாங்கு வாழ எம்பிரானை வேண்டியமைகின்றேன்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

திரு.இ.அரிகரன்
தலைவர், ஈவினை மத்தி கற்பக விநாயகர் சைவ
பரிபாலன சபை

### பொருளாளரின் வாழ்த்துச்செய்தி



எவ்வினையும் வேரறுக்க வல்லோன் தாழ் வணங்கி நீர் வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்று உழு தொழிலைப் பிரதானமாகக் கொண்டு இல்லை எனாது வாரி வழங்கும் சிறப்புமிக்க ஈவினையம் பதியிலே குடியிருந்து ஆலொடு அரசை தல விருட்சமாகக் கொண்டு அருளாட்சி புரிகின்ற ஈவினை மத்தி ஸ்ரீ கற்பக விநாயகர், தன் பரிவார மூர்த்திகளுடன் இன்று குடமுழுக்கு காணுகின்றார்.

காலத்தின் கட்டாயத்தாலும் தமது செயற்கரிய செயலினாலும் எம்பிரானின் விருத்தியையுணர்ந்த புலம்பெயர் மற்றும் உள்ளூர் கிராம அடியவர்கள் தமது ஒற்றுமையை நிரூபிக்கும் முகமாக அனைவரும் இணைந்து வரலாறு காணாத ஓர் புனருத்தாரணத்தை எம்பிரான் சந்நிதானத்தில் நிகழ்த்தி இன்று எம்பிரானுக்கு கும்பாபிஷேக விழாவினைச் சிறப்பாக நிகழ்த்தி எம்பிரானின் அருட்கடாட்சக்கீற்றின் நிழல்களுக்கு உட்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

தன்புகழோடு தனை நாடும் அடியவர் புகழையும் நிலைநாட்டிக்கொண்டிருக்கும் எம்பிரானின் கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவதோடு கற்பகத்தான் தாழ் பணிந்து வணங்கி அவனருள் பெறுவோமாக.

திரு.பா.பாலகணேசன்
பொருளாளரும் தொண்டர்சபைத்தலைவரும்,


V.M.K Brothers
பலாலி றோட்,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
பலாலி றோட்,
உரும்பிராய்ச்சந்தி.
தொ.பே:-0772288245

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக் காரியாலயம்
226,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 4353
கிளை
சுன்னாகம்
கே.கே.எஸ் வீதி.
மதவடி முன்பாக
T.P:-0212 242 022
0714546956

VIGNESWARA PAINTS & ELECTRICAL
170, பலாலி றோட்,
கோண்டாவில்.

சிவசம்பு களஞ்சியம்
இல.3, மின்சார நிலைய வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்

LINGAM'S SILK HOUSE
இல. 18, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

SRIRAAM HARDWARE
பலாலி றோட்,
கோண்டாவில் சந்தி.
தொ.பே:-0779898541

THADSHA
BEAUTY PARLOUR
NO: 84, BROWN ROAD,
NEERAVIYADY, JAFFNA.
T.P:-0212229713

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்
இல. 105, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:0212226953

# அவமதிப்பு வழக்கில் கிலானியின் பதவி பறிப்பு; பாகிஸ்தான் புதிய பிரதமராக மக்தூம் தெரிவு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் யூசப் ரஸா கிலானியை தகுதி நீக்கம் செய்து அந்நாட்டு உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்ட கிலானி கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி முதலே பிரதமர் பதவியில் நீடிக்க தகுதியற்றவர் என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கிலானி இழக்கிறார்.

இந்தத் தீர்ப்பு கிலானிக்கு மட்டுமல்ல அவர் சார்ந்துள்ள பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. நீதிமன்ற தீர்ப்பை அடுத்து கிலானிக்கு பதிலாக வேறு ஒருவரை பிரதமராக்கவும் அக்கட்சி முடிவு செய்துள்ளது.

பிரதமர் கிலானியை தகுதி இழப்பு செய்ய முடியாது என ஜூன் 14 ஆம் திகதி பாராளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்துக்கு சபாநாயகர் ஒப்புதல் வழங்கினார்.

பாராளுமன்ற சபாநாயகரின் முடிவை எதிர்த்து சுப்ரீம் நீதிமன்றில் பல்வேறு தரப்பினரும் மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை தலைமை நீதிபதி இ திகார் சவுத்ரி தலைமையிலான 3 நீதிபதிகள் குழுவினர் விசாரித்து வந்தனர்.

நேற்று முன்தினம் இந்த மனுக்கள் விசாரணைக்கு வந்தபோது தலைமை நீதிபதி இ திகார் சவுத்ரி ஒரு முக்கியமான கேள்வியை எழுப்பினார். அதாவது தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளி 18 கோடி மக்களைக் கொண்ட பாகிஸ்தானின் பிரதிநிதியாக பிரதமர் பதவியில் தொடர முடியுமா? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

### பதவியை பறித்து தீர்ப்பு

இந்த நிலையில் தலைமை நீதிபதி இ திகார் சவுத்ரி தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு பிரதமர் கிலானிக்கு எதிரான மனுக்கள் மீது நேற்று தங்கள் தீர்ப்பை வழங்கினார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்டும் அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யாத நிலையில் பாகிஸ்தான் பிரதமர் பதவியில் நீடிக்க கிலானிக்கு தகுதி இல்லை. அவர் தகுதி இழப்பு செய்யப்படுகிறார் என தீர்ப்பு அளித்தனர்.

பாகிஸ்தான் அரசியல் வரலாற்றில் பிரதமர் ஒருவர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு பதவி பறிக்கப்படுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.



கிலானியின் பதவியை பறித்து சுப்ரீம் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து ஜனாதிபதி சர்தாரி பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவர்களின் அவசர கூட் டத்தை கூட்டி ஆலோசனை நடத்தினார்.

நேற்றுக் காலை நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு பின் ஜனாதிபதி சர்தாரியின் பரிந்துரையைத் தொடர்ந்து பிரதமர் பதவிக்கு பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் மூத்த தலைவர் மக்தூம் சகா புதீன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என தெரிகிறது.

பாகிஸ்தானில் யூசுப் ரசா கிலானி பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான அதிகாரபூர்வமான அறிவிப்பு அறிவிக்கப்படும் என்றும் தெரிகிறது. (அ-2)

# எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் மரணம்?



எகிப்தின்முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் பக்கவாதத் தினால் மரணமடைந்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பக்கவாதத்தினால் அவதிப்பட்டு வந்த அவருக்கு திடீரென மாரடை ப்பு ஏற்பட்டதால் நேற்று முன்தினம் மாலை வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்து விட்டதாக வைத்தியசாலை தகவல்களை ஆதாரப்படுத்தி மீனா செய்தி ஊடக சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

84 வயதான முபாரக் கடந்தாண்டு தனது சர்வாதிகார ஆட்சியிலிருந்து பதவியிறக்கப்பட்டார். கடந்த மாதம் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் மாடி எனும் நகரில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் அவர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவருக்குரிய சிகிச்சை பலனின்றி போனதாகவும் அவரு டைய இருதயம் துடிப்பது நின்று விட்டதாகவும் அவர் உயிர் பிழைத்திருப்பதற்கான சான்றுகள் வெகு அரிதாகவே காணப்படுவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்கள் தெரிவித்துள்ளன. ஆனால் இச்செய்தியை இராணுவம் மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிரிட்டன் பாராளுமன்றில் உரை நிகழ்த்தவுள்ள சூகி

(லண்டன்)

மியன்மார் ஜனநாயக தலைவி ஆங் சான் சூகி பிரிட்டன் பாராளுமன்றில் இன்று உரையாற்றுகிறார்.

தற்போது சூகி வெளிநாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ளார். முதலாவதாக அவர் தாய்லாந்து நாட்டுக்கு சுற்றுப் பயணம் சென்றார். தற்போது அவர் ஐரோப்பிய நாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ளார். சுவிட்சர்லாந்து, நோர்வே, பிரிட்டன், பிரான்ஸ், அயர் லாந்து ஆகிய நாடுகளுக்கு அவர் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் பிரிட்டன் சென்றுள்ள இவர் லண்டனில் உள்ள தன் மகன்களையும் கட்சி பிரமுகர்களையும் சந்தித்தார். நேற்று முன்தினம் அவர் தனது 67 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார்.



இன்றைய தினம் பிரிட்டன் பாராளுமன்றில் உரையாற்றிய பின் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனையும் இளவரசர் சார்லஸ், கமலா ஆகியோரையும் அவர் சந்திக்கவுள்ளார். இதேவேளை நேற்றைய தினம் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் அவருக்கு கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது. (அ-2)

# ஐரோ.நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியா 56 ஆயிரம் கோடி ரூபா நிதியுதவி

## மன்மோகன் அறிவிப்பு

ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார நிலை மேம்படுவதற்கு இந்தியா 56 ஆயிரம் கோடி ரூபா நிதி உதவி வழங்குவதாக ஜி-20 உச்சி மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளார்.

வளர்ச்சி அடைந்த நாடுகள், வளர்ந்து வரும் நாடுகளின் ஜி-20 உச்சி மாநாடு மெக்சிகோ நாட்டில் உள்ள சுற்றுலா நகரமான லாஸ் கேபோஸ் நகரில் கடந்த 18 ஆம் திகதி தொடங் கியது. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ரஷ்ய ஜனாதிபதி விளாடி மிர் புடின் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டில் 17 நாடுக ளைக் கொண்ட ஐரோப்பிய மண் டலத்தின் பொருளாதாரச் சிக்கல் கள் குறித்து முக்கியமாக் விவாதிக் கப்பட்டது. இந்த மாநாட்டில், பிரதமர் மன்மோகன் சிங் நேற்றைய தினம் உரையாற்றுகையில், ஐரோப்பிய மண்டலத்தின் பொருளாதாரச் சிக்கல் களை களைந்து, ஸ்திர நிலையை ஏற்படுத்துவதற்கு சர்வதேச நிதியம் (ஐ.எம்.எ.) மிக முக்கிய ப்ங்களிப்பு செய்து வருகிறது. அந்த வகையில் சர்வதேச நிதியம் இந்தப் பங்களிப்பினை செய்வதற்கு உறுப்பு நாடுகள் அனைவரும் உதவி செய்ய வேண்டும்.



இந்தியாவின் சார்பில் சர்வதேச நிதியத்துக்கு 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் ரூ.56 ஆயிரம் கோடி) வழங்கப்படும்.

இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி குறைந்திருப்பது கவலை அளிக்கக்கூடியதாக அமைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி அடைவதிலும் வேலை வாய்ப்புகளை விரைந்து உருவாக்குவதிலும் இந்திய மக்களிடம் பொறுமையற்ற நிலை காணப்படுகிறது.

பிற நாடுகளைப் போன்றே இந்தியாவிலும் 2008 ஆம் ஆண்டுக்கு பின் நிதிப் பற்றாக்குறை அதிகரித்து விட்டது. இப்போது இந்த நிதி பற்றாக்குறை நிலையை சரி செய்வதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருகின்றோம்.

இதற்கான கடினமான முடிவுகளை எடுத்துத்தான் ஆக வேண்டும். மானியங்களை கட்டுக்குள் கொண்டு வருவதும் இதில் அடங்கும். இதை செய்வதற்கு உறுதி பூண்டுள்ளோம். உலகின் பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இந்தச் சரிவு அர்த்தமுள்ள ஒன்றாகவே அமைந்து இருக்கிறது. ஆனால், இந்த நிலையிலிருந்து விரைவாக மீண்டுவிட வேண்டும். புதிய வேலை வாய்ப்புகள் விரைவாக உருவாக்க வேண்டும் என்பதில் எங்கள் மக்கள் பொறுமை இழந்து காணப்படுகிறார்கள் என பிரதமர் மன்மோகன் சிங் கூறினார். (அ-2)




மெக்சிகோவில் நடைபெற்று வரும் ஜி 20 மாநாட்டிற்கு எதிர்ப்பு த் தெரிவித்து இந்தோனேசியா தலைநகர் ஜகார்த்தாவில் உலக தலைவர்கள் போல் வேடமணிந்து எதிர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது....

நான் செய்கின்ற செயல்கள் எழுபத்தைந்து சத வீதம் சரியாக இருக்குமானால் என்னால் எவ்வளவோ செய்யமுடியும் -ரூஸ்வெல்ட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அக்ரஹாராவை இழந்த சோகம் அறியீரோ!

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கண் வைத்தியசாலை ஒன்றில் அரச உத்தியோகஸ்தர் ஒருவர் கண் சத்திரசிகிச்சை செய்துள்ளார்.

செலவு நாற்பத்தாறாயிரம் ரூபாய் ஆயிற்று. பரவாயில்லை. அரச உத்தியோகஸ்தர்களுக்கு அக்ரஹாரா காப்புறுதிக் கொடுப்பனவு கிடைக்கும் என்ற நம்பிக்கை அந்த உத்தியோகஸ்தருக்கு ஆறுதல்.

உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து உரிய அலுவலகத்திற்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டது.

சில வாரங்களில் அக்ரஹாரா நிதி உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் காத்திருந்தவருக்கு அதிர்ச்சித் தகவல் தான் கிடைத்தது.

உங்களுக்கான அக்ரஹாராக் காப்புறுதிக் கொடுப்பனவு நிராகரிக்கப்படுகிறது என்பதே அந்த அதிர்ச்சித் தகவல்.

விண்ணப்பப்படிவங்களை சரியான முறையில் பூர்த்தி செய்து தனியார் வைத்தியசாலைக்கு பணம் செலுத்திய பற்றுச்சீட்டுக்களை எல்லாம் இணைத்து, கண் சத்திரசிகிச்சை நிபுணர் அதனை உறுதி செய்து விண்ணப்பம் அனுப்பியிருந்தும் அக்ரஹாராக் கொடுப்பனவு நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் என்ன?

இதனை அறிதற்காக தலைமை அலுவலகத்துடன் சம்பந்தப்பட்டவர் தொடர்பு கொண்ட போது,

நீங்கள் கண் சத்திரசிகிச்சை செய்த குறித்த தனியார் கண் வைத்தியசாலை, 2012 ஆம் ஆண்டுக்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவில்லை.

அனுமதிப் பத்திரம் (Licence) பெற்றுக் கொள்ளாத தனியார் வைத்தியசாலையில், நீங்கள் கண் சத்திரசிகிச்சையை செய்தமையால் அதற்குரிய கொடுப்பனவை வழங்க முடியாது உள்ளது. வெரி சொறி என்ற வார்த்தையோடு அக்ரஹாராக் கொடுப்பனவை வழங்கும் நிறுவனத்தின் பதில் முற்றுப் பெற்றது.

ஓ! கண் சத்திரசிகிச்சை வைத்தியநிலையம் விட்ட தவறுக்கு- தனியார் வைத்தியசாலைகள் இயங்குவதற்கான அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை உறுதி செய்கின்ற திணைக்களங்களின் அசமந்தப் போக்கிற்கு ஒரு அரசபணியாளர் பாதிப்படைவது என்பது எந்த வகையில் நியாயமானது?

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாமல் இயங்குகின்ற தனியார் வைத்தியசாலைகள் தொடர்பில் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் பாதிப்படைந்துள்ள அரச உத்தியோகஸ்தர்கள் தமக்கான அக்ரஹாராக் கொடுப்பனவை பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

அதேநேரம் யாழ்ப்பாணத்தின் இத்தகைய சீர்குலைவுகளை யாழ். அரச அதிபர் சீராக்க அதிரடி நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையும் நமக்கு உண்டு.

# இலங்கையில் சிறுவர்கள் பலாத்காரமாக விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர்

## இராஜாங்கத் திணைக்களம் குற்றச்சாட்டு

இலங்கையில் சிறுவர்கள், பெண்கள் அதிகம் பாலியல் கடத்தலுக்கு உட்படுத்தப்படுவதாகவும் அதிலும் பெண்களைவிட சிறுவர்கள் பலாத்காரமாக கடலோர சுற்றுலா தளப் பகுதிகளில் பாலியல்,விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாகவும் ஐக்கிய அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள மனிதக் கடத்தல்கள் தொடர்பான அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

மேலும் தோட்ட உலர் மண்டல விவசாயத்துறை, மீன் உலர்த்தி தொழிற்துறை மற்றும் மீன்பிடித்துறையில் சிறுவர்கள் பலாத்காரமாக தொழிலுக்குச் சேர்க்கப்படுவதாக ஐக்கிய அமெரிக்காவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேயிலைத் தோட்டப்புற தமிழ்ச் சிறுவர்கள் சிலர் கொழும்பில் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுவதாகவும் அவர்கள் உடல், உள பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு ஊதியம் வழங்கப்படாமல் கட்டுப்பாடுகளுடன் அடக்கி வைக்கப்படுவதாகவும் அமெரிக்கா வின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் சிறு எண்ணிக்கையிலான தாய்லாந்து, சீனா உள்ளிட்ட தெற்காசிய ஐரோப்பிய பெண்கள் இலங்கையில் கட்டாய விபச்சாரத்திற்கு உட்படுத்தப்படிருக்கலாம் என அறிக்கையில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கடத்தல்களைக் குறைக்க இலங்கை அரசு முழுமையான நடவடிக்கை எடுக்கவில்லை என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் அரசாங்கத்தின் மாதாந்தக் கூட்டங்கள் மூலம் மோசடி ஆட்சேர்ப்பு குற்றங்கள் தொடர்புடைய இரண்டு தொழிலாளர் ஆட்சேர்ப்பு முகவர் நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டன் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக 17 நாடுகள் மனித கடத்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக் காது அவற்றுக்கு உடந் தையாக இருப்பதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்ஜீரியா, மத்திய ஆபிரிக்கக் குடியரசு, கொங்கோ, கியூபா, கானா, சவுதி அரேபியா, எரித்திரியா, ஈரான், வடகொரியா, குவைத், லிபியா, மடகஸ்கார், பப்புவா நியூகினி, கரினாம், சிரியா, யேமன் மற்றும் சிம்பாவே என்பன அந்த 17 நாடுகளாகும். (அ-2)

# மரபுரிமைக்கழகம் அங்குரார்ப்பணம்; புத்திஜீவிகள் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர மரபுரிமைக்கழகத்தின் தலைவராக முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கழகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் மாலை யாழ்.மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போதே முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா இந்த மரபுரிமைக்கழகத்தின் தலைவராகவும் செயலாளராக ஆசிரியர் இரா.செல்வவடிவேல், போசகர்களாக யாழ்.பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், வரலாற்றுத்துறைப் பேராசிரியர்.ப.புஸ்பரட்ணம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ்.மாநகர மரபுரிமைக்கழகத்தின் தலைவராக யாழ். மாநகரசபையின் முதல்வர் பதவியில் உள்ளவரே பதவி வகிப்பார் எனவும் ஏகமனதாக முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச்சின்னங்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் யாழ் . மாநகரசபை எடுத்துள்ள இந்த முயற்சிக்கு பேராசிரியர்கள் முதற்கொண்டு நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் பாராட்டுத் தெரிவித்ததோடு நன்றியும் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# காந்திஜி சனசமூக நிலையத்தில் பல்வேறு விழாக்கள்

(யாழ்ப்பாணம்)

திரு.திருமதி ஆனந்தி ரஞ்சன் தம்பதிகளின் அனுசரணையுடன் இயங்கும் காந்திஜி சனசமூக நிலைய புதிய முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழாவும் புதிய மைதானத்திறப்பு விழாவும் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளி புதிய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காந்திஜி சனசமூக நிலையத்தலைவர் த.யோபின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/ கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக டாக்டர் எஸ்.வி.கணேசவேல், இலங்கை வங்கி உரும்பிராய் முகாமையாளர் எ.சந்துரு, கோப்பாய் ஈ.பி.டி.பி அமைப்பாளர் இ.ஜங்கரன், வலி.கிழக்கு செஞ்சிலுவைச்சங்கத்தலைவர் இ.மயில்வாகனம், உரும்பிராய் புனித மைக்கேல் ஆலய பங்குத்தந்தை ஆ.ஜூட் நிக்சன், வலி.கிழக்கு பிரதேசசபை பொறுப்பதிகாரி திருமதி ஜானகி கணேசலிங்கம், உரும்பிராய் கிழக்கு கிராமஅலுவலர் எஸ்.எழிலரசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# சத்திய தரிசனம்



நாம் யாரிடமும் பிரதிபலன் கருதி அன்பு செலுத்தக்கூடாது.

பலனை எதிர்நோக்கி அன்பு காட்டுவது என்பது ஒரு வியாபாரத்தைப் போன்றது. அன்புக்கு வியாபாரத்துடன் எந்தச் சம்பந்தமும் கிடையாது.


அன்பு என்பது கொடுப்பது வாங்குவது என்றெல்லாம் இணைத்துப் பார்ப்பதல்ல. எந்தப்பலனும் எதிர்பாராது சரணாகதியாவதுதான் அன்பு.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நில வள முன்னேற்றம் தொடர்பில் இலங்கையரின் அனுபவம் பற்றி யாழ்.முகாமையாளர் சம்மேளனம் நடத்தவுள்ள கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சிறப்புப் பேச்சாளராக மொறட்டுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் பட்டயப் பொறியியலாளருமாகிய பொறியியல் கலாநிதி உடேனி பி.நவகமுவ கலந்து கொள்வார் என ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (அ-9)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# நெய் விளக்கேற்றினால் நினைத்தது நிறைவேறுமா?

இருளை விலக்குவது விளக்கு. அருளை வழங்குவது விளக்கு. ஜோதியை வழிபட்டால் ஒளிமயமான வாழ்க்கை உருவாகும் என்பதால் ஜோதியோடு இலட்சுமியை ஒப்பிட்டு ஜோதிலெட்சுமி என்று சொல்வார்கள்.

ஆதிலெட்சுமியும் ஜோதிலெட்சுமியும் உங்களுக்கு அருள் கொடுத்தால் பாதியில் நின்ற பணிகள் கூட பரபரப்பாக முடிவடையும். பணித்தேவைகள் பூர்த்தியாகும்.

மின்விளக்கிற்கும் நெய் விளக்கிற்கும் ஒரு மிகப்பெரிய வேறுபாடு உண்டு. ஒரு மின் விளக்கை மற்றொரு மின்விளக்கோடு ஒட்டி வைத்தால் பற்றிக் கொள்ளாது. ஆனால் அதேசமயம் ஒரு எரியும் நெய் விளக்கை மற்றொரு நெய் விளக்கோடு ஒட்டிவைத்தால் அதுவும் பற்றிக்கொண்டு எரியத் தொடங்கும்.

ஏனவே நமது பற்றுக்களை, ஆசைகளை இறைவனிடம் தெரிவிக்க செல்லும் பக்தர்கள் நெய் விளக்கேற்றினால் நினைத்தது நிறைவேறும்.

# குளூஸ்னர் ஞாபகத்திற்கு வருகின்றார்



இலங்கை அணியின் இளம் சகலதுறை வீர ரான திஸ்ஸர பெரேரா தென்னாபிரிக்காவின் முன்னாள் நட்சத்திர சகலதுறை வீரரான லான்ஸ குளூஸ்னரை ஞாபக மூட்டுவதாக இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளரான கிரஹாம் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸர பெரேரா துடுப்பெடுத்தாடும் விதம் தனக்கு லான்ஸ் குளூஸ்னரை ஞாபகமூட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

1992 ஆம் ஆண்டு கிரிக்கெட் பயிற்றுவிப்புப் பணியை ஆரம்பித்த கிரஹாம்ஃபோர்ட் பயிற்சியளித்த முதலாவது அணியில் லான்ஸ் குளூஸ்னர், ஷோன் பொலக், மல்கொம் மார்ஷல் ஆகியோர் இடம்பெறிறிருந்தனர். அதன் பின்னர்

ஃபோர்ட் 1999 ஆம் ஆண்டு தென்னாபிரிக்கத் தேசிய அணிக்கும் பயிற்றுவித்திருந்தார். திஸ்ஸர பெரேரா பந்தை அடித்தாடும் விதம் தனக்கு லான்ஸ் குளூஸ்னரை ஞாபகமூட்டு வதாகத் தெரிவித்த அவர் திஸ் ஸர பெரேராவிற்கு தற்போது 23 வயது மாத்திரமே ஆகி றது எனவும் அவர் ந்தும் வளர்ந்து வர அவர் னமும் சிறந்த வீரராக மாறு எனவும் தெரிவித்தார்.



தொடர் இன் வார் திஸ்ஸர ருப்பது எனத் தெரிவி ஆகிய மூன்று கொடுக்கக் தெரிவித் திஸ்ஸர இலங்கை கடின பயிற் ள்ளது என அவரை இந் அவர் கொண்டு க்களைத் ஒருநாள் சர்வ வென்ற போது, தான் தெரிவிப்பதா தேசப் போட் திஸ்ஸர பந்து வீச்சு

பெரேரா போன்ற ஒரு வீரரைக் கொண்டி இலங்கைக் கிரிக்கெட்டிற்கு மிகவும் சிறப்பானது த்த ஃபோர்ட், பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத் தடுப்பு பிரிவாலும் போட்டிகளை அணிக்காக வென்று கூடிய திறன் திஸ்ஸ பெரேராவிற்கு உண்டு எனத் தார்.

பெரேராவின் கடின உழைப்பைப் பாராட்டிய அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன, அவரது சியே அவுரை இந்தளவுக்குக் கொண்டு வந்து வும் அவர் தொடர்ந்தும் சிறப்பான பயிற்சியே தளவுக்குக் கொண்டு வந்துள்ளது எனவும் தொடர்ந்தும் சிறப்பான பயிற்சிகளை மேற் எதிர்காலத்தில் சிறந்த வீரராக மிளிர வாழ்த்து கவும் தெரிவித்தார். பாகிஸ்தானுக்கெதிரான டித் தொடரில் தொடர் நாயகன் விருது தனது பெறுபேறுகள் குறித்துத் தெரிவித்த சகலதுறை வீரராகவே அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பந்து வீச்சே தனது பிரதான நோக்கமாக அமையும் எனவும் தெரிவித்தார்.

# அம்லா அதிரடியில் தென்னாபிரிக்கா வெற்றி



சிம்பாப்வே முக்கோண டுவென்டி டுவென்டி தொடரில் தென்னா பிரிக்க அணி நேற்று முன்தினம் நடை பெற்ற போட்டியில் பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்டது.

ஹராரே விளை யாட்டுக்கழக மைதான த்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தா டத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென் னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 3 விக்கெட் டுக்களை இழந்து 209 ஓட் டங்களைப் பெற்றது. முதலாவது விக்கெட்டுக் காக ரிச்சாட் லீவி, அணித் தலைவர் ஹசிம் அமலா இருவரும் 6.2 ஓவர்களில் 70 ஓட்டங்களைக் குவி த்தனர். இரண்டாவது விக்கெட்டுக்காக கொலின் இன்க் ராம், ஹசிம் அம்லா இருவரும் 7.1 ஓவர்க ளில் 85 ஓட்டங்களை யும் 3 ஆவது விக்கெட்டுக் காக அல்பி மோர் க்கல், ஹசிம் அம்லா இருவரும் 5.2 ஓவர்களில் 50 ஓட்டங்களையும் குவி த்தனர். 4 ஆவது விக்கெ ட்டுக் காக ஹசிம் அம்லா, ஜே.பி.டு மினி இருவரும் பிரிக்கப்பட முடியாத 24 ஓட்டங்களை 8 பந்துகளில் பெற்றுக் கொண்டனர். துடுப்பாட் டத் தில் தென்னா பிரி க்க அணி சார் பாக ஹசிம் அம்லா 53 பந்து களில் 88 ஓட்டங்க ளைப் பெற்றார். ரிச்சாட் லீவி 21 பந் துகளில் 37 ஓட்டங்களை யும் கொலின் இன்க்ராம் 22 பந்துகளில் 29 ஓட் டங் களை யும் ஜே. பி.டுமினி 7 ப ந் துகளில் 23 ஓட்டங்க ளையும் அல்பி மோர்க்கல் 18 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்ற னர். பந்து வீச்சில் பங்களா தேஷ் அணி சார்பாக ஷிய வூர் ரஹ்மான் 3 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட் டையும் மஷ்ரபி மோர் தஷா 4 ஓவர்களில் 44 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 210 ஓட்டங் களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத் தாடிய பங்களாதேஷ் 20 ஓவர்களில் 8 விக் கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களையும் பெற்று 39 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அவ்வணி சார்பாக அணித் தலைவர் முஷ்பிக்கூர் ரஹீம் 32 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங் களையும் மஹமதுல்லா 23 பந்துகளில் 34 ஓட்டங்களையும் மொஹமட் அஷ்ரபுல் 31 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார் பாக றொபின் பீற்றர்சன் 4 ஓவர்களில் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மார்ச் சன்ட் லீ லாங்கா 4 ஓவர்களில் 33 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் லொன்வ போ சொற்சொபி 4 ஓவர்களில் 25 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் அல்பி மோர்க்கல் 3 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக துடுப்பாட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்ட தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஹசிம் அம்லா தெரிவானார்.

## விளையாட்டுச் செய்திகள்....

# எல்லேபோட்டி

(மல்லாவி)

வடமாகாணத்திற்கு உட்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான இளைஞர் கழகங்க ளுக்கிடையில் மாகாண மட்ட பெரு விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான எல்லே போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய யாழ்.மாவட்ட அணியும் முல்லை.மாவட்ட அணியும் மோதிக் கொண்டன. முதலில் களமிறங்கிய யாழ்.மாவட்ட அணி முதலாம் சுற்றில் மூன்று ஓட்டங்களை மட்டும் எடுத்து சகல ஆட்டக்காரர்களையும் இழந்தது.

பின் களமிறங்கிய முல்லை. மாவட்ட அணி முதலாம் சுற்றில் 11 ஓட்டங்களை எடுத்து சகல ஆட்டக்காரர்களையும் இழந்தது.

இரண்டாம் சுற்றில் களமிறங்கிய யாழ்.அணி ஐந்து ஓட்டங்களைப் பெற்று சகல ஆட்டக்காரர்களையும் இழந்ததன் மூலம் 3 ஓட்டங்களினாலும் ஒரு இன்னிங்ஸ் இனாலும் யாழ்.மாவட்ட அணி தோல்வியைத் தழுவிக் கொண்டது. முல்லை. மாவட்ட பெண்கள் அணி முதல் முறையாக மாகாண சம்பியனாகியது. (3-15)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி: வதிரி டயமன்ஸ் சம்பியன்

(கரவெட்டி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தின் உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ண த்தை வதிரி பொம்மஸ் அணியைத் தோற்கடித்து வதிரி டயமன்ஸ் அணி சம்பியனா கியது. பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் இற்கு உட்பட்ட 34 அணிகள் பங்குபற்றிய அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற் றுக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் வதிரி பொம்மஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது. இதில் முதற்பாதி ஆட்டத்தில் 4 கோல்களைப் போட்டு வதிரி டயமன்ஸ் அணி முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப்போட்டனர்.

இறுதியில் 5:1 என்ற கோல்கணக்கில் வதிரி டயமன்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. வதிரி டயமன்ஸ் அணி சார்பாக பிறேம்குமார் 3, அரவிந்தன் 2 கோல்களைப் போட்டனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக டயமன்ஸ் அணியின் பிறேம்குமார் தெரிவு செய்யப்பட்டார். (3-24)



சம்பியன் பட்டம் வென்ற முல்லைத்தீவு மாவட்ட அணி முதலாமிடம் பெற்றது.



யாழ். மாவட்ட அணி இரண்டாம் இடம்பெற்றது.

# யூரோ கால்பந்து தொடர்:காலிறுதியில் இங்கிலாந்து, பிரான்ஸ்

யூரோ கால்பந்து தொடரில் நேற்று முன்தினம் நடந்த மற்றொரு போட்டியில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் உக்ரைனை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. நட்சத்திர வீரர் ரூனே இங்கிலாந்து அணியை காலிறுதிக்கு அழைத்துச் சென்றார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலிறுதியில்இங்கிலாந்து இத்தாலியை சந்திக்கிறது.

இதே போன்று டி பிரிவில் நடந்த மற்றொரு போட்டியில் பிரான்ஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் சுவீடன் அணியிடம் தோற்றாலும் புள்ளிகள் அடிப்படையில் காலிறுதிக்குள் நுழைந்தது.

மிக எளிதாக பிரான்ஸ் வெற்றி பெற்று டி பிரிவில் முதலிடத்தை பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பிரான்ஸ் வீரர்கள் வழக்கத்தை விட மந்தகதியில் ஆடினார்கள். இதை பயன்படுத்தி சுவீடன் வீரர்கள் சரமாரி தாக்குதலில் ஈடுபட்டனர். ஆட்டத்தின் 54 வது நிமிடத்தில் சுவீடன் வீரர் இப்ராகிம்மோவிக் முதல் கோலை அடித்தார். அதற்கு பதிலடி கொடுக்க பிரான்ஸ் முயற்சி.எடுக்கவில்லை.

கடைசி கட்டத்தில் வழங்கப்பட்ட கூடுதல் நேரத்தில் சுவீடன் வீரர் லார்சன் மீண்டும் ஒரு கோலை அடித்தார். இதனால் 2-0 என்ற கணக்கில் சுவீடன் முதல் வெற்றியை பெற்றது. இந்த வெற்றியால் எந்த பிரயோசனமும் சுவீடனுக்கு இல்லை. ஏற்கெனவே 4 புள்ளிகளுடன் உள்ள பிரான்ஸ் காலிறுதிக்கு முன்னேறிது. அதேசமயம் போட்டியில் தோல்வி அடைந்ததால் காலிறுதி சுற்றில் இத்தாலியை சந்திக்கும்வாய்ப்பைபிரான்ஸ்அழகாகதவிர்த்தது.





# மே.தீவுகளுக்கு எதிரான தொடரை இங்கிலாந்து வென்றது

இங்கிலாந்து- மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 2-வது ஒருநாள் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களை எடுத்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் 53 ஓட்டங்கள் (51 பந்து, 3 பவுண்டரிகள்,5 சிக்சர்) விளாசி நல்ல தொடக்கம் தந்தும் பின்வரிசை வீரர்கள் டெவன் பிராவோ 77 ஓட்டங்கள், பொலார்ட் 41 ஓட்டங்கள் தவிர வேறு யாரும் சோபிக்கவில்லை.

அடுத்து ஆடிய இங்கிலாந்து 45 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 239 ஓட்டங்கள் சேர்த்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும்,அணித் தலைவருமான அலஸ்டயர் குக் 112 ஓட்டங்கள் (120 பந்துகளில் 18 பவுண்டரி, ஒரு சிக்சர்) விளாசினார்.

தொடர்ந்து 6-வது முறையாக இங்கிலாந்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஒருவர் சதம் அடித்துள்ளார். இந்த சாதனையை இதற்கு முன்பு எந்த அணியும் செய்ததில்லை. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை இங்கிலாந்து 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.கடைசி ஒருநாள்ஆட்டம் நாளை இடம்பெறும்.

இதேவேளை இரு அணிகளுக்கிடையிலான ஒரேயொரு இருபது-20 போட்டி எதிர்வரும் 24-ம் திகதி நடக்கிறது.

# காலிறுதி ஆட்டம் இன்று ஆரம்பம்

யூரோ காலிறுதி போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்றைய முதல் போட்டியில் செக் குடியரசு -போர்த்துகல் அணிகளும்,

நாளை ஜேர்மனி-கிரீஸ் அணிகளும், நாளை மறுதினம் ஸ்பெயின்-பிரான்ஸ் அணிகளும், 24-ம் திகதி இங்கிலாந்து-இத்தாலி அணிகளும் மோதுகின்றன.

இப்போட்டிகள் அனைத்தும் இலங்கை நேரப்படி அதிகாலை 12.15 மணிக்கு ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாற்றுத்திறனாளிகளுக்காக ஜெய்ப்பூர் நடத்தும் போட்டிகள்

## 25-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்

யாழ்.ஜெய்ப்பூர்வலுவிழந்தோர்புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு மாற்றுத் திறனாளிகளாவுள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பயனாளிகள் பங்குபற்றும் முச்சக்கர வண்டி ஓட்டம், துவிச்சக்கரவண்டி ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம், தடைதாண்டி ஓட்டம், மெதுவான சைக்கிள் ஓட்டம், சங்கீதக் கதிரை மற்றும் கயிறிழுத்தல் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பரியோவான் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பயனாளிகள் ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை இலவசமாகப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 25-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, தலைவர், ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி ,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக கையளிக்க முடியும் என ஜெய்ப்பூர் நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

# அரசை வீட்டுக்கு அனுப்...

மானபொறுப்பைமகிந்தராஜபக்ஷவினுடைய அரசே பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் நாட்டு மக்களுடைய தற்போதைய பொறுப்பு மனிதப் படுகொலையினைச் செய்துவரும் மகிந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதே. இருப்பினும் அம்பாந்தோட்டை இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய அமரே பிரபல அரசியல்வாதி ஒருவருடைய ஆலோசனைக்கு அமையவே நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

எனினும் அவர் நீதிமன்றத்தில் சரணடைந்தமையானது அமரேயின் பழைய குற்றம் ஒன்றுக்காகவே என அவரே பகிரங்கமாகத் தெரிவித்துள்ளதாகவும் லால்காந்த மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 15-ம் திகதி அம்பாந்தோட்டை கட்டுவானவில் நடைபெற்ற ஜே.வி.பியின் கூட்டத்தின்போது இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததுடன் 50 பேர் காயமடைந்தனர்.

அதற்குப் பின்னர் இச்சம்பவம் ஜே.வி.பியினருக்குள் உள்ள உட்பூசல் காரணமாகவே நடைபெற்றது என்று அரச தரப்பு சார்பாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் அறிவித்திருந்தது.

இருப்பினும் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளைக் கைது செய்யாது அவர்களை அரசு பாதுகாத்து வருகின்றது.

அத்துடன் பொலிஸாரும் அவர்களைப் பாதுகாத்து வருகின்றனர் என ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது. எனினும் குற்றவாளிகளை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரி பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்த ஜே.வி.பி நேற்று முன்தினம் கொழும்பு கோட்டைப் பகுதியில் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# புலிகளின் நடவடிக்கை...

பற்றி கருத்துரைத்த தூதுவர் ஆரியசிங்க, லக்ஸம்பேர்க் போன்ற நிதி மற்றும் வங்கி மத்திய நிலையங்கள் தம்மை தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற குழுக்கள் துஷ்பிரயோகம் செய்வதை தடுக்கும் வகை யில் மிகுந்த கண்காணிப்புடன் இருக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

லக்ஸம்பேர்க்கிலிருந்து இலங்கைக்கு சுற்றுப்பயணத்தை ஊக்குவிக்க லக்ஸம்பேர்க் பயண அதிகார பீடங்கள் உதவ வேண்டும் என இலங்கைத் தூதுவர் கேட்டுக் கொண்டார்.

இரண்டு நாடுகளுக்கு இடையில் பொருளாதார தொடர்புகள் அதிகரித்திருப்பதையும் லக்ஸம்பேர்க்கில் இலங்கை கூடிய கவனத்துக்கு உள்ளாகியிருப்பதையும் பிரதி உதவிப் பிரதமர் அலஸ்போண் வரவேற்றார். (எ-11)

# இலங்கைப்...

140 உத்தியோகத்தர்களும் எதிர்வரும் 25-ம் திகதி லெபனான் பயணம் செய்யவுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக ஹெய்ட்டியில் அமைதி காக்கும் பணியில் ஈடுபடும் நோக்கில் 7 அதிகாரிகள் மற்றும் 111 படை வீரர்கள் எதிர்வரும் யூலை மாதம் பயணமாகவுள்ளனர்.

அமைதி காக்கும் பணிகளில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 12 ஆயிரம் பேர் கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# அக்கறை...

பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் சிறுவர்கள் அதிகளவில் பாலியல் ரீதியாக துன்புறுத்தப் படுவதாகவும், சிறுமிகளை விடவும் சிறுவர்கள் கரையோரப் பகுதிகளில் பலவந்தமான முறையில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப் படுவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# அனுமதி மறுக்கப்பட்டால்...

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் 19வது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தின் படி இலங்கைக்கு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் உண்மைகளைக் கண் டறியும் குழு ஒன்றை அனுப்பிவைத்தல் தொடர்பில் நவநீதம்பிள்ளை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், தனது இலங்கை விஜயத்துக்கு முன்னதாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழுவின் பயணம் அமையும் எனவும் அவர் அரசாங்கத்துக்கு தெரிவித்திருந்தார்.

ஆனால், நவநீதம்பிள்ளையின் கோரிக்கை தொடர்பில் ஒரு வார காலத்தில் பதிலளிக்கப் படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக தகவல் வெளியிட்டிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம, இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு சர்வதேச சமூகத்தால் விடுக்கப்படும் கோரிக்கைகளை அரசாங்கம் நிராகரிக்கவில்லை எனவும், ஆனால் அவர்களின் விஜயத்துக்கான நோக்கம் மற்றும் அதன் தேவைகள் குறித்து கவனத்தில் கொள்ளப்படும் எனவும் கூறியிருந்தார்.

இந்நிலையில், நவநீதம்பிள்ளையின் கோரிக்கை தொடர்பில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு இலங்கை உத்தியோகபூர்வமற்ற வகையில் பதில் ஒன்றை அனுப்பியுள்ளதாக கூறப்படுகின்றது. நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயத்தை தாங்கள் எதிர்க்கவில்லை எனவும், ஆனால் உண்மைகளைக் கண்டறியும் குழுவுக்கு அனுமதி வழங்க முடியாது என்றும் இப்பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமற்ற வகையில் அனுப்பப்பட்ட இக் கடிதத்துக்கு நவநீதம்பிள்ளை பதில் அனுப்பவில்லை எனஜெனிவாவில் இருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கைக்கு விஜயம் செய்ய உண்மைகளைக் கண்டறியும் குழுவுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் மறுப்புத் தெரிவித்தால், நவநீதம்பிள்ளை இரு நடவடிக்கைகளை மேற்கொள்வதற் கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக தெரிய வருகின்றது.

உண்மைகளைக் கண்டிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தவறியுள்ள நிலையில், இவ்விவகாரத்தை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தின் முன்கொண்டு செல்வது தொடர்பில் அடுத்த ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் நவநீதம்பிள்ளை பரிந்துரைக்கக்கூடும்.

அல்லது அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விசேட அறிக்கை ஒன்றை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிப்பதுடன், சிறிலங்கா மீது மேலுமொரு தீர்மானத்தைக் கொண்டுவர அவர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (எ-11)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம:

# புதிய நகை கடைத் திறப்புவிழா அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் ஆனி மாதம் 07ஆம் நாள் (21.06.2012) வியாழக்கிழமை (இன்று) பகல் 11.30 மணி முதல் 12.15 மணி வரையுள்ள புனர்பூச நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்



K.T.பிலாசா என்னும் புதிதாக அமைக்கப்பெற்ற கட்டிடத்தில்

## ஆசைப்பிள்ளை அன் சன் நகை மாடம்



என்னும் நகை கடை ஸ்தாபனம் இறைவன் திருவருள் துணை கொண்டு ஆரம்பிக்க இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து, ஸ்தாபனத்தை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்நாளும் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

K.T.பிலாசா, பிரதான வீதி, சங்கானை.

திரு.திருமதி ஆ.குணசேகரம் திலகராணி குடும்பத்தினர்

(C-306)

---

# SPOKEN ENGLISH

இலங்கையின் முன்னணி ஆங்கிலக் கல்லூரி

**E-CITY**

College of English

(குருகுலம், ஆனைப்பந்தி சந்தி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)

புதிய பிரிவு

ஆரம்பம்:- 23.06.2012

காலை 10 மணி

(சனி/ ஞாயிறு 10.00 - 12.30 வரை)

0774924166

(8678)

---

## முக்கிய அறிவித்தல்

கே.கே.எஸ் வீதி அகலிப்புப் பணியை முன்னிட்டு ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் ஆகிய எமது நிறுவனம் எதிர்வரும் 25.06.2012 ஆம் திகதியிலிருந்து 25,ஜீம்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C-303)

T.P: 021 222 5542, 021 567 1527

---

**Engineering-USA** 4,300.Rs Per Module
**BIT Degree** 4,800.Rs Per Semester
**Diploma** 1,000.Rs Per Course Discount
**CIMA UK** 10,000.Rs Per Level Discount

A/L 2012 பரீட்சைக்கு தோற்றுவோரும் கட்டணம் இன்றி விண்ணப்பிக்கலாம்

SMS Your name & Course to 775520940 & Get Schol.

Qualified Lectures panel, 12 Years Experience

மேலதிக விபரங்களுக்கு நேரில்

**MCAI CAMPUS**

Supported by Jaffna Computer Society

கல்வியங்காட்டில்
243,Adiyapatham Road
Bus Route 750 / 751

---

# மணல் விற்பனைக்குண்டு

கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.

**4 டிரக்டர் - 21,000/-**

தொடர்புகளுக்கு

ரமேஸ்

0722694462

(8660)

---

# RAINBOW TRAVELS JAFFNA BRANCH




# OPEN TODAY

20 வருடங்களாக கொழும்பு மாநகரில் சேவைகளை ஆற்றி வந்த எமது ஸ்தாபனம் இன்று முதல் யாழ் நகரில் எமது சேவைகளை தொடர்கின்றோம்.

## எமது சேவைகள்

### STUDENT VISA

Newzealand செல்வதற்குரிய visa ஒழுங்குகள் குறுகிய காலத்தில் செய்து கொடுப்பதுடன் அங்கு நிரந்தர குடியுரிமையும் Work Permit மூன்று வருட காலத்தில் பெற்றுக் கொடுக்கப்படும்.

MBBS - உங்கள் வாழ்நாள் கனவான நீங்கள் விரும்பும் Doctor பட்டத்தை குறைந்த கட்டணத்தில் பின்வரும் நாடுகளில் பெற்று சர்வதேச அங்கீகாரத்துடன் உலக நாடுகளில் Doctor ஆக தொழில் புரிய முடியும்.

நாடுகள்:- China, Poland, Czech Republic, Russia, Ukraine, London, Caribbean Countries (North America)




### SINGAPORE / MALAYSIA

மாதாந்த சம்பளமாக 65000 ரூபா பெற்று உங்கள் உயர் கல்வியையும் சிங்கப்பூரில் பெற்றுக் கொள்ளலாம்.
இரண்டு வருட பட்டப் படிப்பின் பின்பு நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக் கொள்ளலாம்.

### Canada உயர் கல்வி

PhD/ Master (MA, MSc, MBA) போன்ற பட்டப் படிப்பினை கனடாவிலும் நியுசிலாந்திலும் கற்பதன் மூலம் அந்த நாட்டில் நிரந்தர வதிவிட உரிமையை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



### மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு

சவுதி அரேபியா, டுபாய், குவைத், டோகா கட்டார், ஓமான் போன்ற நாடுகளில் மேசன், தச்சுத்தொழில், பிளம்பர், எலக்ரீசன், மேற்பார்வையாளர் போன்ற வேலைகளுக்கு குறுகிய காலத்தில் அனுப்பி வைக்க முடியும்.

### சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் சேவை (Parcel Service)

பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், இத்தாலி, கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே போன்ற நாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்கார, அன்பளிப்பு பொருட்களை 3, 4 நாட்களில் அவர்களது விலாசத்தில் ஒப்படைக்கப்படும்.

**மேற்குறிப்பிட்ட சகல சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்**

தொடர்புகளுக்கு:- **Rainbow Travels**

30/2, 3rd Lane,
Power House Road, Jaffna.
TP: 0778980652

(C-302)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.